

உள்ளடக்கம்

2019

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகத்தின்

உள்ளடக்கம்....

01 எங்களைப் பற்றி
தொலைநோக்கு
பணி
ஆளுகைச் சபை

02 சிறப்பு நிகழ்வுகள் 2019

06 தலைவரின்
செய்தி

07 நிறைவேற்றுப்
பணிப்பாளரின்
அறிக்கை

09 ஆராய்ச்சி
நிகழ்ச்சத்திட்டம்

10 பேரண்டவணிகமும்
போட்டித்தன்மையும்.

21 புலம்பெயர்தல்
மற்றும்
நகரமயமாக்கல்

26 சுகாதாரம், கல்வி
மற்றும் ஊழியம்

33 வறுமைமற்றும்
சமூகநலனோம்புகை

38 விவசாயம் மற்றும்
விவசாயவர்த்தகஅபிவிருத்தி

41 சுற்றாடல்,
இயற்கைவளங்கள்
மற்றும்
காலநிலைமாற்றம்

46 ஆராய்ச்சிப்
பணியளர்கள்

47 ஆராய்ச்சிப்
பணியளர்கள்

48 ஆவதுதெற்காசியபொ
ருளாதாரமாநாடு 2019

50 உதவிச்
சேவைகள்

51 தொடர்பாடல் மற்றும்
வெளிச்சென்று
சேவையாற்றுதல்

52 தகவல் முறைமை

53 நூலகவளங்கள்

55 வெளியீடுகள் 2019

56 உள்ளகருத்த
ரங்குகள்

57 கொள்கை கற்கைகள்
நிறுவகத்தின்
உள்ளகபயிற்சிநி
கழ்ச்சித்திட்டம 2019

58 நிதிஅறிக்கைகள்

எங்களைப் பற்றி

இலங்கையில் கொள்கை கற்கைகள் நிறுவகம் என்பது பாராளுமன்ற சட்டமொன்றினால் தாபிக்கப்பட்டுள்ள இலங்கையின் பொருளாதார கொள்கைகள் தொடர்பிலான ஆராய்ச்சியில் உச்ச மட்டத்திலுள்ள நிறுவனமாகும். கொள்கைகளை வகுப்பதற்கும் அனைத்து இலங்கையர்களின் வாழ்கையினை மேம்படுத்துவதற்கும் தேவையாக அமையும் உறுதியான ஆதாரங்களை வழங்கும் பொருட்டு உயர் தரத்திலானதும் சுயாதீனதுமான கொள்கைகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் எமது பணியாகும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு (25) மேலாக தமது நிறுவகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மிகச் சிறப்புவாய்ந்த பல சுயாதீன ஆராய்ச்சிகள் காரணமாக கொள்கை கற்கைகள் நிறுவகம் பொருளாதார கொள்கை ஆராய்ச்சி துறையில் நிபுணத்துமிக்க நிலையமாக அங்கீகாரம் பெற்றுள்ளது. இந் நிறுவகத்தின் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வாயிலாக இலங்கை மற்றும் ஆசிய பிராந்தியத்தில் தற்போதைய சமூக பொருளாதார கொள்கை உருவாக்கத்திற்கு ஏதுவாக மிகவும் முக்கியமான பல துறைகள் உள்வாங்கப்படுகின்றன. அறிக்கைகள், ஆராய்ச்சி பத்திரங்கள், சஞ்சிகைகளுக்கான கட்டுரைகள் மற்றும் பகிரங்க சமர்ப்பணங்கள் வாயிலாக விரிவாக பரப்பப்படும் அனுபவ அடிப்படையிலான ஆராய்ச்சிகளின் வாயிலாக பொருளாதாரம் சார்ந்த கொள்கை வகுத்தலுக்கு உதவி வழங்கும் தமது வெற்றிகரமான சாதனையை உருவாக்குவதற்கு தளமாக அமைந்த விடயம் யாதெனில் நிறுவனத்திலுள்ள பலம்பொருந்திய உள்ளக ஆராய்ச்சியாளர்கள் குழுவின் பரிபூரணமான நிபுணத்துவம் ஆகும்.

தொலைநோக்கு

இலங்கையின் சமூக பொருளாதார நிலைமாற்றத்திற்கு உந்துசக்தியாக அமையும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நிறுவனமாக மாற்றமடைதல்.

பணி

சமூக – பொருளாதார பிரச்சினைகள் தொடர்பாக நம்பகத்தன்மைமிக்க, நுண்ணறிவினை வழங்கும் உயர் தரத்திலான சுயாதீனமான கொள்கை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதின் ஊடாக எமது பங்கீடுபாட்டாளர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் மற்றும் கொள்கை நிகழ்ச்சி நிரலை சீரமைத்தல் மற்றும் அவற்றின் ஊடாக அனைத்து இலங்கையர்களின் வாழ்கையின் மீது சாதகமானதொரு தாக்கத்தை ஏற்படுத்துதல்

ஆளுகைச் சபை

பேராசிரியர் சிறிமல் அபேரத்ன, தலைவர்
பொருருளியல் தொடர்பிலான சிரேஷ்ட பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்

கலாநிதி இந்திரஜித் குமாரஸ்சுவாமி, உறுப்பினர்
ஆளுனர், இலங்கை மத்திய வங்கி (பதவிவழியில்)

திருமதி சாந்தனி விஜேவர்தன, உறுப்பினர்
செயலளார், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு (பதவி வழியில்)

திருமதி. எஸ்.எஸ் முதலிகே, உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் (பதவிவழியில்)

கலாநிதி சரத் ராஜபதிரண, உறுப்பினர்
பொருளாதாரம் பற்றிய சனாதிபதியின் ஆலோசகர்

டாக்டர் ரோஷன் பெரேரா, உறுப்பினர்
இலங்கை மத்திய வங்கியின் கூடுதல் இயக்குநர்

கலாநிதி ரொக்ஷான் பெரேரா, உறுப்பினர்
மேலதிக பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி

கலாநிதி துக்ஷ்னி வீரகோன், நிறைவேற்றுப் பணிப்பாளர்
இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம்

சிறப்பு நிகழ்வுகள்

பிரதான நிகழ்வு

ஐபிஎஸ் (கொள்கை கற்கைகள் நிறுவகம்) – மொனாஷ் கருத்தரங்கு தெற்காசியாவின் பொருளாதார அபிவிருத்தி பற்றிய புதிய ஆராய்ச்சிகளை எடுத்தியம்புகின்றது.



ஐபிஎஸ் மற்றும் அபிவிருத்தக்கான பொருளியல் மற்றும் நிலைபேறான தன்மைக்கான மையம் (ஊனுநுளு) மற்றும் அவுஸ்திரேலியா, மொனாஸ் பல்கலைக்கழகத்தின் தென்னாசியா ஆராய்ச்சி வலையமைப்பு ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட –தென் ஆசியாவின் பொருளாதார அபிவிருத்தி" மீதான கருத்தரங்கு 2019 சனவரி 07 – 08 ஆகிய தினங்களில் களுத்துறையில் நடைபெற்றது..

இக்கருத்தரங்கில், வறுமை மற்றும் சமத்துவமின்மை, தொழில் முயற்சி, விவசாயம், சுற்றாடலின் நிலைபேறான தன்மை,உழைப்பு மற்றும் புலம்பெயர்வு, கல்வி, பேரண்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதிச் சந்தைகள் ஆகிய துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. மேலும் இவ்விடயம் எழுமாற்று கள பரிசோதனைகள், நுகர்வின் இடஞ்சார்ந்த விநியோகம், மற்றும் பல் பரிமாண வறுமையுடனான இடைத் தொடர்புகள் மற்றும் பிற நுண் பொருளாதார கணிதப் புள்ளியியல் போன்ற சமீபத்திய ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்தி

மார்ச்சு

ஐபிஎஸ் ஆராய்ச்சியாளர்கள் 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கு பதிற்செயற்பாடு காட்டுதல்



2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐந்தாம் தேதி 2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் இலங்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போது கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மேற்படி வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பாக தங்களது கருத்துக்களை டுவிட்டர் வாயிலாக முன்வைத்தனர். பேரண்ட பொருளாதார வளர்ச்சி, வரிவிதிப்பு, வாணிபம், கல்வி, புலம்பெயர்வு, ஊழியப் படையின் பங்கேற்பு, நிலைபேறான அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் போன்ற பல்வேறு விடயப் பரப்புகள் தொடர்பாக தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

பெப்ரவரி

தெற்காசியாவில் காணப்படும் வெளிவாரியான எளிதில் பாதிப்படையும் தன்மைகள் எனும் தலைப்பில் ஒரு பிராந்திய கருத்தரங்கின் இணை ஏற்பாட்டாளராக ஐபிஎஸ் செயற்பட்டது.



ஐபிஎஸ், நிறுவகமானது உலக வங்கி, இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து 2019 பெப்ரவரி 28 முதல் மார்ச்சு 01 ஆம் திகதி வரை நடைபெற்ற "தென்னாசியாவில் காணப்படும் வெளிவாரியான எளிதில் பாதிப்படையும் தன்மைகள் எனும் தலைப்பிலான பிராந்திய கருத்தரங்கு" ஒன்றை ஏற்பாடு செய்தது.

மேற்படி கருத்தரங்கில் உரையாற்றிய ஐபிஎஸ் இன் நிறைவேற்று பணிப்பாளர் துஷ்னி வீரகோன் அடுத்த சில ஆண்டுகளில் இலங்கை தான் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு கடன்களில் கணிசமானதொரு அளவினை மீளச் செலுத்துவதற்கு தயாராகும் நிலையில் வெளிநாட்டு கடன் அதிகரித்தல் மற்றும் வளர்ச்சி குன்றுதல் ஆகிய இரண்டு விதமான உடனடி ஆபத்துக்களை இந்நாடு எதிர்நோக்கி இருப்பதாக தெரிவித்தார். இந்நிலையில் பேரண்ட பொருளாதார முகாமைத்துவத்திற்கு கொள்கையில் நிலையாய் இருத்தல் மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறை முக்கியமானதாக இருக்கின்றதென அவர் மேலும் வலியுறுத்தினார்.

2019

ஏப்பிறல்

கண்டி மாநகரில் காணப்படும் வாகன நெரிசல் தொடர்பான ஆராய்ச்சி சமன் கெலேகம ஞாபகார்த்த ஆராய்ச்சி விருதை பெற்றுக்கொண்டது.



கலாநிதி சமன் கெலேகம அவர்களின் சுயாதீன ஆராய்ச்சி மற்றும் அரச கொள்கைகள் சார்ந்த விடயங்களில் ஈடுபடுதல் பற்றிய மரபுக்கு மதிப்பளிக்கும் வகையில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் சமன் கெலேகம ஞாபகார்த்த ஆராய்ச்சி விருது – 2019 வாயிலாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணிஷ்ஷ்க வெரெல்ல மாணவனுக்கு ரூ.150,000.00 பணத் தொகை பரிசாக வழங்கப்பட்டது. மேற்படி மாணவன் கொள்கை கற்கைகள் நிறுவகத்தில் மூன்று மாத கால உள்ளக பயிற்சியை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் மேற்கொண்ட "கண்டி நகரில் காணப்படும் வாகன நெரிசலினால் விளையும் கிரயத்தை மதிப்பிடுதல் மற்றும் பசுமை முறையில் பயணிகள் போக்குவரத்திற்கு" தாக்கம் விளைவிக்கும் காரணிகள் தொடர்பான ஆராய்ச்சிக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

மே

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் உலகளாவிய ஒருங்கிணைவுக்காக வாணிய கொள்கைகளை ஈடுபடுத்திக் கொள்ளுதல் பற்றி உரையாற்றுகின்றார



பிரதான உலகளாவிய பொருளாதார போக்குகளை கருத்திற்கொண்டும் பாரியளவிலான இணைப்பு கருத்திட்டங்களில் காணப்படும் சவால்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் நிறைவேற்று பணிப்பாளர் திருமதி. துஷ்னி வீரகோன் "உட்கட்டமைப்பு வசதிகள், நிதியிடல் மற்றும் பட்டுப் பாதை நிகழ்ச்சித்திட்டம்: புதிதாக தோன்றும் பொருளாதாரங்களுக்கு காணப்படும் சவால்கள்" எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையொன்றை முன்வைத்தார்.

பொதுநலவாய அமைப்பு மற்றும் தெற்காசிய ஆய்வு நிறுவகத்தின் இணை ஏற்பாட்டில் 2019 மே மாதம் 28 – 29 ஆம் திகதிகளில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில்" உலகலாவிய ஒருங்கிணைவுக்காக வாணிய கொள்கைகளை ஈடுபடுத்திக் கொள்ளுதல் எனும் தலைப்பின் கீழ் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான பொதுநலவாய ஆலோசனை அமர்வில் அவர் உரை நிகழ்த்தினார்.

ஜூன்

திருமதி.அஷானி அபேசேகர இலங்கையில் ஓய்வூதியம் உள்வாங்கும் எல்லை பற்றி உரையாற்றுதல்



பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் கொரியா கொள்கை மையத்தினால் அனுசரனை வழங்கப்பட்ட 2019 ஜூன் மாதம் 13 – 14 திகதிகளில் தென்கொரியாவின் சோல் நகரில் நடைபெற்ற பதினான்காம் ஓய்வூதிய நிபுணர்களின் சந்திப்பின் போது கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சி அலுவலர் திருமதி. அஷானி அபயசேகர "இலங்கையில் ஓய்வூதியம் உள்வாங்கும் எல்லை" பற்றிய சமர்ப்பணம் ஒன்றை முன்வைத்தார். இலங்கையில் மூப்படையும் மக்கள் தொகை விரைவாக அதிகரித்து வரும் சூழமைவில் பல்வேறு ஓய்வூதிய திட்டங்களின் வாயிலாக ஓய்வூதியம் பெறுவதற்கு தகைமையுடைய மக்கள் தொகையை உள்வாங்குதல், தற்போது அவ்விடயத்தில் முகம்கொடுக்கப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் சர்வதேச சிறந்த வழக்கங்கள் ஆகியவற்றிலிருந்து கற்றுக்கொண்டு பாரிய உள்வாங்கும் எல்லைக்கான வசதிகளை ஏற்பாடு செய்யக் கூடியவாறு நடைமுறைப்படுத்தக் கூடிய கொள்கை நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு இந்த சமர்ப்பணம் ஊடாக கவனம் செலுத்தப்பட்டது.

யூலை

முதியவர்கள் ஊழியப் படையில் பங்கேற்றல் மீது தாக்கம் விளைவிக்கும் காரணிகளை திருமதி. கங்கா திலகரத்ன வலியுறுத்தினார்.



2019 ஜூலை மாதம் 12ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவில் வாஷிங்டன் டீ.சியில் அமைந்துள்ள உலகவங்கியின் தலைமையகத்தில் நடாத்தப்பட்ட புதிதாக வளர்ந்து வரும் உலகளாவிய சவால்கள் மற்றும் தெற்காசிய அபிவிருத்தி மூலோபாயங்கள் பற்றிய பொருளாதார மாதிரிகளை உருவாக்குதல் பற்றிய தெற்காசிய வலையமைப்பு – உலகவங்கியின் மூன்றாம் வட அமெரிக்க கலந்துரையாடல் மன்றத்தில் வயது முதிர்ந்த ஊழியப் படை மற்றும் இலங்கையின் பொருளாதாரம் மீது அதனால் ஏற்படும் தாக்கத்தை வலியுறுத்தி கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சிக் குழுவின் உறுப்பினர் திருமதி கங்கா திலகரத்ன " ஓய்வு பெற வேண்டிய வயதுக்கும் அப்பால் பணியாற்றுதல்: முதியவர்கள் இலங்கையின் ஊழியப் படையில் பங்கேற்கும் போக்கு மற்றும் அதற்கு தாக்கம் விளைவிக்கும் காரணிகள்" எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையொன்றை முன்வைத்தார்.

ஆகஸ்ட்

தெற்காசியாவில் காணப்படும் வெளிவாரியான எளிதில் பாதிப்படையும் தன்மைகள் எனும் தலைப்பில் ஒரு பிராந்திய கருத்தரங்கின் இணை ஏற்பாட்டாளராக ஐபிஎஸ் செயற்பட்டது.



தேயிலை கைத்தொழில் துறையின் ஊழியர்களுக்கு தங்களது வாழ்க்கைக்கு போதுமான சம்பளம் கிடைத்தல் சார்பாக இலங்கையில் கற்கை சம்பவங்களின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களை மீளாய்வு செய்து கொள்கை கற்கைகள் நிறுவனத்தின் ஆராய்ச்சி குழு உறுப்பினர் மனோஜ் திப்பொட்டுவாவ 2019 ஆகஸ்ட் மாதம் 7 – 9 திகதிகளில் நியூயோர்க் நகரத்தில் அமைந்துள்ள சோஷல் அக்கவுண்டபிலிடி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைமையகத்தில் நடத்தப்பட்ட வாழ்வதற்கு போதுமான சம்பளம் பற்றிய உலகளாவிய ஒன்றியத்தின் முதலாவது ஆராய்ச்சி வலையமைப்பு செயலமர்வில் கலந்து கொண்டார். அவர் தேயிலைக் கொழுந்து பறிப்பவர்களுக்கு வாழ்வதற்கு போதிய சம்பளம் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு தேயிலை பெறுமதி தொடர்களுக்குரிய அனைத்து தரப்புகளுடனும் ஒன்றிணைந்து பணியாற்றுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

செப்டெம்பர்


கொள்கை கற்கைகள் நிறுவகம் 12 ஆவது தெற்காசிய பொருளாதார மாநாட்டிற்கு அனுசரணை வழங்குகின்றது.



கொள்கை கற்கைகள் நிறுவகம் " நான்காவது கைத்தொழில் புரட்சியில் தெற்காசியாவின் பொருளாதாரத்தை வழிவமைத்தல்" எனும் தொனிப் பொருளை வலியுறுத்தி 2019 செப்டம்பர் 26 – 27 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற 12 ஆவது தெற்காசிய பொருளாதார மாநாட்டிற்கு அனுசரணை வழங்கியது. மேற்படி மாநாட்டில் தெற்காசியாவில் காணப்படும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தொழில்நுட்பம் பொருளாதாரம் மற்றும் அரசியல் ஆகியவற்றுக்கிடையிலான இடைத் தொடர்பினை வலியுறுத்தப்பட்டது. இந்த மாநாடு ஆரம்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டு முதற்கொண்டே மேற்படி மாநாட்டின் வாயிலாக தெற்காசிய பிராந்தியம் முகம் கொடுத்துள்ள சமூக பொருளாதார சவால்களை கலந்துரையாடுதல் மற்றும் விவாதித்தல் ஆகியவற்றுக்கு தெற்காசிய நாடுகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பினை வலுவூட்டுவதற்கும் மேம்படுத்துவதற்கான பிராந்திய மன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

அக்டோபர்

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் முதன்மை அறிக்கையாகிய "இலங்கை: பொருளாதார நிலை 2019" எனும் அறிக்கை வாயிலாக "நான்காம் கைத்தொழில் புரட்சியில்" இலங்கை பொருளாதாரத்தை நிலைமாற்றத்திற் உடபடுத்துதல்" மீது நிறுவகம் கவனம் செலுத்துகின்றது.



கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் முதன்மையான அறிக்கை என கருதப்படும் " இலங்கையின் பொருளாதார நிலை 2019" அறிக்கை " நான்காம் கைத்தொழில் புரட்சியின் இலங்கையின் பொருளாதாரம் மாற்றமடைதல்" எனும் தொனிப்பொருளின் கீழ் 2019 ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்பட்டது. நான்காம் கைத்தொழில் புரட்சியின் தொழில்நுட்பங்கள் இலங்கையின் எதிர்கால பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் காரணிகளாக செயற்படும் தொழில்துறைகளாகிய தொழில் உலகம், கல்வி, புலம்பெயர்வு, பால் சமூகநிலை, சுகாதாரம், நிதிசார் உள்வாங்குகை, வாணிபம், விவசாயம் மற்றும் காலநிலை மாற்றம் உள்ளிட்ட ஏனைய காரணிகள் ஆகிய இலங்கை பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் இந்த ஆய்வின் மூலம் ஆராயப்பட்டுள்ளது.

நவம்பர்

கொள்கை கற்கைகள் நிறுவகம் புகையிலை சார்ந்த உற்பத்திகளினால் விளையும் பாதிப்புகளை குறைப்பதற்கு இலக்கு வைக்கப்பட்ட கொள்கைகளை கொண்டுருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.



2019 ஆம் ஆண்டில் கொள்கை கற்கைகள் நிறுவகம் இலங்கையில் புகையிலை பாவனையை கட்டுப்படுத்தும் கொள்கையொன்று இருப்பதற்கான தேவையினை வலியுறுத்துகின்ற ஆராய்ச்சிக் கற்கைத் தொடர் ஒன்றை ஆரம்பித்தது. முஜஹரு இன்டர்நேஷனல்) மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தின் கென்சர் ரிசர்ச் ஆகிய அமைப்புகளின் நிதியளிப்பின் கீழ் நடாத்தப்பட்ட இரண்டு ஆண்டுகால நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக இலக்கு வைக்கப்பட்ட மாற்றுக் கொள்கை வாயிலாக இந்நாட்டில் காணப்படும் புகையிலை பாவனை சார்ந்த பாதிப்புகளை குறைத்தல் இதன் நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக கொள்கை கற்கைகள் நிறுவகம் 2019 நவம்பர் மாதம் 06 ஆம் திகதி கொழும்பில் புகையிலை பாவனையை கட்டுப்படுத்துவதற்கான செயலமர்வு ஒன்றை ஏற்பாடு செய்தது. இச் செயலமர்வில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சித்துறை பணிப்பாளர் திருமதி நிஷா அருணதிலகவின் தலைமையில் நிறுவகத்தில் ஆராய்ச்சியாளர்கள் 2019 சனாதிபதி தேர்தல் அண்மித்திருந்தபோது புகையிலை பாவனையை கட்டுப்படுத்துவதற்கான கொள்கைகள் தொடர்பாக நிறுவனம் மேற்கொண்ட ஆராய்ச்சி பற்றிய தகவல்களை ஆதரித்து வாதாடும் குழுக்கள் மற்றும் சமுதாய மட்டத்திலான அமைப்புகளுடன் பகிர்ந்து கொண்டது.

டிசம்பர்

உலகளாவிய மனிதாபிமான கொள்கைகள் பற்றிய மன்றத்தில் திருமதி பிலேஷா வீரரத்ன புலம்பெயர்வின் போதும் நகரமயமாக்கலின் போதும் காணப்படும் சவால்களை வலியுறுத்தினார்.



கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சிக் குழு உறுப்பினர் திருமதி. பிலேஷா வீரரத்ன ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அலுவல்களை ஒருங்கிணைப்பதற்கான அலுவலகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2019 டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி நியூயோர்க் நகரத்தில் நடாத்தப்பட்ட உலகளாவிய மனிதாபிமான கொள்கைகளுக்கான மன்றத்தில் கலந்து கொண்டார்.

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல் தொனிப்பொருள் பற்றிய தலைமைப் பொறுப்பாளராக பணியாற்றும் அவர் இந்த அரங்கில் ஊழியர் புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல் தொடர்பான பிரச்சினைகளுக்கு மத்தியில் மனிதாபிமானச் ஏற்பாடுகளின் எதிர்காலத்தை வழவமைக்கும்போது எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் மற்றும் பிரதான போக்குகளை வலியுறுத்தினார்.

தலைவரின் செய்தி



°சழகநளளழச ளுசைஅைடய யுழநலசயவநெ

இலங்கை கொள்கை கற்கைகள் நிறுவகம் இந்நாட்டிலுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களில் முதன்மை நிலையிலுள்ளதொரு ஆராய்ச்சி நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த பல வருடங்களாக இந்நிறுவனம் தனது கல்விசார் ஆற்றலையும் பொருளாதார திட நிலையையும் சிறந்த முறையில் பேணி வந்துள்ளது. தெற்காசிய பிராந்தியத்தில் மிகச் சிறந்த முறையில் தன்னை நிலைநிறுத்தி பெரும் வரவேற்பினை அடைந்துள்ள இந்நிறுவகத்தின் முன்னேற்றத்தை காண்பதற்கும் அதற்கு பங்களிப்பு வழங்குவதற்கும் 2019 ஆம் ஆண்டு இந் நிறுவனத்தின் தலைவராக பணியாற்றிய எனக்கு வாய்ப்பு கிட்டியமை எனக்கு பெரும் உவகையைத் தருகின்றது. உலகளாவிய அங்கீகாரமுடைய நிறுவனமாக மாற்றமடைய வேண்டுமெனும் நமது தொலைநோக்கினை அடைந்து கொள்ளும் நோக்கில் கொள்கை கற்கைகள் நிறுவகம் மீளாய்வாண்டிலும் தமது அபிவிருத்திப் பயணத்தை இடையறாமல் முன்னெடுத்துச் செல்வதற்கு தயங்கவில்லை. இப்பயணத்தின் போது கொள்கை கற்கைகள் நிறுவகம் பிரசுரித்த ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வினை வழங்குவதற்காக நடாத்திய செயலமர்வுகள் ஆகியவற்றின் ஊடாக நிறுவகம் கொள்கைசார் கலந்துரையாடல்களுக்கு ஏதுவாக இந்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளினதும் கவனத்துக்கு உள்ளாகியதொரு நிறுவனமாக மாற்றமடைந்தது.

இலங்கையில் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும் விடயத்தின் போது காலத்துக்கேற்ப முக்கியத்துவம் வாய்ந்த துறைகளை உள்வாங்கி அதனடிப்படையில் மேற்கொண்டுள்ள ஆழமான கொள்கைசார் ஆராய்ச்சிகள் தொடர்பான பிரதான விடயங்கள் இவ் அறிக்கையில் உள்ளடங்குகின்றன. கோவிட்-19 தொற்று காரணமாக எதிர்நோக்க வேண்டியிருந்த பாரிய சவால்களுக்கு மத்தியிலும் கூட நிறுவகத்தின் முதன்மையான வெளியீடாக அமையும் "இலங்கை - பொருளாதார நிலை" எனும் வெளியீட்டினை இடையறாமல் வெளியிடுவதற்கு ஆற்றல் கிட்டியமை எவ்வகையான நிலையற்ற தன்மைகள் காணப்படினும் நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் எந்தளவிற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றார்கள் என்பதற்கு சான்று பகருகின்றது. 2019 ஆம் ஆண்டிலும் கொள்கை கற்கைகள் நிறுவகம் பொருளாதார கொள்கைசார் ஆராய்ச்சிகளுக்கு பங்களிப்பு வழங்கிய அதேவேளை சமன் கெலேகம ஞாபகார்த்த ஆராய்ச்சி விருது வழங்கும் நடவடிக்கையின் ஊடாக ஆராய்ச்சி துறைசாரந்த எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நடவடிக்கைகளை நிறுவகம் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்றது.

இச் செய்தியை நிறைவு செய்வதற்கு முன்னர் மீளாய்வாண்டில் கொள்கை கற்கைகள் நிறுவகம் அடைந்து கொண்டுள்ள மேற்படி முக்கியமான வெற்றிகளுக்காக நிறுவகத்தின் முகாமைத்துவத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதற்கும் நிறுவகத்தின் செயற்பாடுகளை நிர்வகித்து மேற்பார்வை பணியினை மேற்கொண்ட ஆளுகை சபையின் பங்களிப்பினை பாராட்டுவதற்கும் இச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி திருமதி. துஷ்னி வீரகோன் அவர்கள் உள்நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச மட்டத்திலும் நிறுவனத்தின் புகழை ஓங்கச் செய்வதற்கு நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்கு தலைமைத்துவம் வழங்கியுள்ளார். மேலும் நிறுவனத்தின் வெற்றியின் பால் பெருமளவு பங்களிப்பு வழங்கியுள்ள ஆராய்ச்சி மற்றும் நிர்வாகப் பணியாட்டொகுதியின் அர்ப்பணிப்பையும் நான் பெருமளவு மெச்சுகின்றேன். கொள்கை கற்கைகள் நிறுவகம் இந்நாட்டின் பொருளாதார ஆராய்ச்சித் துறைசார்ந்த எதிர்கால சந்ததியை ஊக்குவிக்கும் அதேவேளை நம்பகத்தன்மையுடன் கூடிய கொள்கை ஆராய்ச்சி நிறுவகம் என்ற தனது வகிபாகத்தை மேலும் விரிவாக்குமென திடமாக நம்புகின்றேன்.



°சழகநளளழச ளுசைஅைடய யுழநலசயவநெ
ஊயசைஅயெ

நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை



னுச. னுரளாகை றுநநசயமழழகை

ஆராய்ச்சி மற்றும் அரச கொள்கைகள் சார்ந்த விடயங்களில் ஈடுபடுதல் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் பிரதான பணிகளாகும். எமது ஆராய்ச்சிகளின் ஊடாக நாம் அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையினை சாதகமான முறையில் மாற்றியமைக்கும் பொருட்டு நிலைபேறான, புத்தாக்க மற்றும் விரிவான அடிப்படையுடன் கூடிய அபிவிருத்தியின் ஊடாக இலங்கையின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கு நோக்கம் கொண்டுள்ளோம்.

2019 ஆம் ஆண்டில், நாங்கள் எங்கள் ஆராய்ச்சி செயற்பாடுகளின் ஊடாக நிறுவகத்தின் 2018-2021 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆறு தொனிப்பொருள் சார்ந்த துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தினோம். (1) பேரண்டப் பொருளாதாரம், வாணிபம் மற்றும் போட்டித்தன்மை: (2) உழைப்பு, கல்வி மற்றும் சுகாதாரம்: (3) புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல்: (4) வறுமை மற்றும் சமூக நலனோம்புகை: (5) விவசாயத்துறை மற்றும் விவசாய தொழில்முயற்சி அபிவிருத்தி: அத்துடன் (6) சுற்றாடல் இயற்கை வளங்கள் மற்றும் காலநிலை மாற்றங்கள் ஆகிய மேற்படி துறைகள் இதில் உள்ளடங்குகின்றன. மூன்றாண்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டமொன்றின் அடிப்படையினை தயாரித்துக் கொள்ளும் பொருட்டு எமது பிரதான பங்கீடுபாட்டாளர்களுடன் விரிவாக கருத்துக்களை வினவும் செயன்முறையினை பின்பற்றிய பின்னர் ஒவ்வொரு தொனிப்பொருளினதும் கொள்கைகளை பரிசீலிப்பதற்கான முன்னுரிமை துறைகள் இனங்காணப்பட்டுள்ளன. இத்தகைய பல்வேறு துறைகளின் ஊடாக நாம் கொள்கைகளை வகுப்பதற்காக வழங்கப்படும் ஆராய்ச்சி கருப்பொருட்களின் வாயிலாக மக்களுக்கு இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் பங்குபற்றுவதற்கும், பங்களிப்பு வழங்குவதற்கும் அத்துடன் அவற்றினூடாக நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் உதவி வழங்குதல் நோக்காகக் கொள்ளப்படுகின்றது.

இவ்வாண்டிலும், நிறுவகம் மேற்படி ஆறு தொனிப்பொருள் சார்ந்த துறைகள் தொடர்பான அனைத்து துறைகளைப் பற்றியும் ஆழமாக பல கற்கைகளை ஆரம்பித்துள்ளது. 2019 ஏப்ரல் மாதத்தில் நிகழ்ந்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களின் காரணமாக ஏற்கனவே பொருளாதார செயற்பாடுகளில் பின்னடைவினை வெளிப்படுத்திய பொருளாதாரத்திற்கு மற்றுமொரு பாரிய தாக்கம் ஏற்பட்டதுடன் அதன்மூலம் வளர்ச்சி தொடர்பாக தாக்கம் விளைவிக்கும் கட்டமைப்பு ரீதியிலான தடைகள் காணப்படுதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. முதிர்வடையும் வயதுடைய சனத்தொகையொன்று காணப்படுதல் மற்றும் போதிய அளவு திறன் விருத்தி காணப்படாத நிலை ஆகியவற்றின் காரணமாக தொழில்நுட்பத்தினால் நெறிப்படுத்தப்படும் பயனுறுதிமிக்க வளர்ச்சிக்கான எதிர்பார்ப்புகள் ஆராய்ச்சிகளின் கவனத்தை தூண்டுகின்ற துறையாக மாறியுள்ளது. மிகவும் குறைவாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த இத்துறை தொடர்பாக கவனம் செலுத்தும் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் கொள்கை கற்கைகள் நிறுவகம் "இலங்கை: பொருளாதார நிலை" எனும் தனது முதன்மையான அறிக்கையின் வாயிலாக இவ்விடயத்திற்கு முன்னோடியாக செயற்பட்டது. தொழில் உலகம், கல்வி, புலம்பெயர்தல், ஆண் பெண் பால் சமூகநிலை, சுகாதாரம், நிதிசார் உள்வாங்குகை, வாணிபம், விவசாயம் மற்றும் காலநிலை மாற்றம் உள்ளிட்ட ஏனைய துறைகளில் ஏற்பட்டுள்ள "நான்காவது கைத்தொழில் புரட்சி" என அழைக்கப்படும் பாரிய தொழில்நுட்ப முன்னேற்றத்தின் வாயிலாக ஒட்டுமொத்த பொருளாதாரம் முழுவதிலும் ஏற்படக்கூடிய தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல் மற்றும் புரிந்து கொள்ளுதல் இதன் நோக்கமாக அமைந்தது.

மேலும், புகையிலைப் பாவனையின் காரணமாக மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்களை குறைக்கும் பொருட்டு 2019 ஆம் ஆண்டில் கொள்கை கற்கைகள் நிறுவகம் இலங்கையில் புகையிலை பாவனையை கட்டுப்படுத்துவதுடன் தொடர்புடைய பிரச்சினைகளைப் பற்றிய நான்காண்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தையும் அக் கொள்கைக்கு சார்பாக ஆதரித்து வாதாடும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டது. இந்த ஆராய்ச்சியின் முதலாவது கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஏதேனும் திட்டவட்டமான கற்கைகளின் ஊடாக தற்போது புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கையை இனங்காணுதல், அவர்கள் இன்னும் என்ன காரணத்திற்காக புகை பிடிக்கிறார்கள் என்பதையும் மிகவும் பொருத்தமான கொள்கைப்

பதிற்செயற்பாடுகள் மீது அதனால் விளையும் தாக்கங்கள் யாவை என்பதைப் பற்றி புரிந்துகொள்ளுதல், தாக்கத்துக்கு உள்ளாகக் கூடிய புகையிலை பயிரிடுபவர்களுக்காக மாற்றுப் பயிர்களை அடையாளம் காணுதல் போன்ற விடயங்கள் நோக்காகக் கொள்ளப்படுகின்றது. இதன்கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் ஒரு பகுதியாக கொள்கைத் துறையினை மிகக் கவனமாக வரைபடத்திற்கு உட்படுத்திய பின்னர் புகையிலை பாவனையை குறைப்பதை நோக்காகக் கொண்ட கொள்கைகளுக்கு ஆதரவாக பல்வேறு பங்கீடுபாட்டாளர்கள் மத்தியில் பணியாற்றுவதுதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், ஆராய்ச்சி தொடர் ஒன்றின் மூலம் இலங்கையின் புலம்பெயர் ஊழியர்கள் முகம்கொடுக்கும் மிகவும் முக்கியமானதாக அமையும் கணிசமானளவு பிரச்சனைகள் குறித்து விளித்துரைக்கப்பட்டது. ஏனைய விடயங்களில் ஒன்றாக இலங்கை இளைஞர்கள் தங்களுடைய எதிர்காலத்தை நோக்குகின்ற விதம் மற்றும் புலம்பெயர்வதற்கு அவர்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்பு, குடும்பப் பின்னணி அறிக்கை போன்ற சட்டங்கள் காரணமாக புலம்பெயர் ஊழியர்களுக்கு காணப்படும் தொழில் வாய்ப்புகளை அடைந்து கொள்வதற்கு நிலவுகின்ற பால்நிலை சார்ந்த தடைகள், புலம்பெயர் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிற்பாட்டு செலவினங்கள், புலம்பெயர் ஊழியர் இந்நாட்டில் விட்டுச்செல்லும் குடும்பத்தில் எஞ்சி இருக்கின்ற உறுப்பினர்களின் சேமிப்பு மற்றும் கடன் பெறுதல் சார்ந்த நடத்தைகள் மீது புலம்பெயர்தல் ஏற்படுத்துகின்ற முறைமுகமான தாக்கம் போன்ற விடயங்கள் கவனம் செலுத்தப்பட்ட பிரதான துறைகளில் சிலவாகும்.

தேசிய ரீதியில் பெரும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ள உலகலாவிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2030 நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதைப் பற்றி கவனம் செலுத்தும் போது கொள்கை கற்கைகள் நிறுவகம் சீனாவின் பட்டுப்பாதை நிகழ்ச்சித்திட்ட கருத்திட்டத்தின் வாயிலாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் பெறுபேறுகள் மீது ஏற்படக் கூடிய தாக்கங்களை புரிந்து கொள்வதற்காக ஆராய்ச்சிகளை ஆரம்பிப்பதுடன் பிராந்திய செயற்பணியின் ஒரு கட்டமாக உள்நாட்டு மட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதன் மூலம் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய அமைச்சுக்கு தன்னார்வ அடிப்படையில் தேசிய மீளாய்வினை தயாரிக்கும் பொருட்டு நிறுவகம் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய பணிகள் தொடர்பாக பின்னாய்வினை மேற்கொண்டது.

சமூகரீதியில் அனைவரும் உள்வாங்கப்படும் அபிவிருத்திக்கான கொள்கை இடையீடுகளின் வெற்றியானது அதிகப்படியான இலங்கை மக்களின் வாழ்வாதாரமாக அமையும் விவசாயத்துறையுடன் இணைந்தாக காணப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் சில ஆராய்ச்சிகள் தேசிய கைத்தொழில்களின் இலாபகரமான தன்மை, வினைத்திறன் மற்றும் போட்டித்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியதாக மதிப்பீடு செய்வதற்கான கொள்கை பகுப்பாய்வு கோட்பாடொன்றை தயாரிப்பதாக அமைந்திருந்தன. இதற்கு மேலதிகமாக இலங்கையில் விவசாயத்துறையின் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கான மூலோபாயங்களை இனங்காணும் பொருட்டு விவசாய ஊழியர் சந்தை பெண்கள்மயமாகுதல், முதுமை அடைதல், வெளிநாடுகளுக்கு புலம் பெயர்தல் மற்றும் பாதி அளவில் விவசாயத்தில் ஈடுபடுதல் போன்றவாறு காணப்படும் பிரச்சினைகள் ஏனைய ஆராய்ச்சிகளின் வாயிலாக ஆராயப்பட்டது.

நகர வளர்ச்சி உயர்வடைவதால் ஏற்படும் கேள்வி காரணமாக காணி வளம் மீது ஏற்படுத்தப்படும் அழுத்தத்தின் விளைவாக இலங்கையில் யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்களின் பாதகமான தாக்கங்கள் அதிகரித்துவருவதை காணக்கூடியதாக உள்ளது. மனிதர்கள் மற்றும் வன சீவராசிகள் மீது ஏற்படுத்தப்பட்டுவரும் தாக்கங்கள் அதிகரித்து வருவதனாலும் வாழ்வாதாரங்கள் அழிவடைந்து வருவதனாலும் இவ்விடயம் கொள்கைகளின் கவனத்திற்கு கொண்டுவருவதற்காக உடனடியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாக மாற்றமடைந்துள்ளது. இலங்கையில் மனிதர்களுக்கும் வன சீவராசிகளுக்கும் இடையிலான மோதல்களுக்கு தீர்வு காணக்கூடிய ஒரு முறைமையாக களத்தில் முன்னோடி பரிசோதனையாக மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் வாணிப ரீதியில் செயல்படுத்தப்படுகின்ற காப்புறுதி திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள வாய்ப்புகளை மதிப்பீடு செய்து பார்ப்பதற்கான இரண்டு ஆண்டுகால ஆராய்ச்சியொன்று கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் எஞ்சிய பகுதியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவாறு சமநிலையில் உள்ளவர்களினால் மீளாய்வு செய்யப்படுகின்ற தேசிய மற்றும் சர்வதேச வெளியீடுகள் போன்ற கல்விசார் ரீதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உடன்பாடுகளின் வாயிலாக எமது ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சி முடிவுகளில் காணப்படும் மிகவும் ஒழுங்குமுறை


சார்ந்த தன்மை தொடர்ச்சியாக ஆராய்ந்துபார்க்கப்படுகின்றது. யுத்தத்துக்கு பின்னரான சூழமைவில் சமூக அரசியல் நல்லிணக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பாக ஆக்கப்பட்டுள்ள நூலிதழ் 2019 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சர்வதேச வெளியீடுகளில் மிக முக்கியமானதாகும். கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஏனைய புகழ்மிக்க இலங்கை பொருளியல் நிபுணர்களின் பங்களிப்புடன் ஆக்கப்பட்டுள்ள யுத்தத்துக்கு பின்னரான காலகட்டத்தின் அபிவிருத்தியில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்கள் மற்றும் வாய்ப்புகளை முகாமைத்துவம் செய்தல்: இலங்கையிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள்" எனும் நூல் இதழ் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் முன்னாள் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி சமன் கெலெகம அவர்களின் பெயரில் சமர்ப்பணம் செய்யப்பட்டது. யுத்தம் நிறைவடைந்து ஒரு தசாப்த காலம் நிறைவடைந்துள்ள நிலையில் இந்த வெளியீட்டின் பல்வேறு அத்தியாயங்கள் ஊடாக நிலைபேறான சமாதானம் மற்றும் சமூக ஒருங்கிணைவை பேணி வருவதற்காக விரிவான முறையில் வியாபித்திருக்கும் மற்றும் அனைவரும் உள்வாங்கப்படும் அபிவிருத்தியொன்றின் தேவை வலியுறுத்தப்படும் முக்கியமான பகுப்பாய்வொன்று முன்வைக்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டில், பன்னிரண்டாவது தென்னாசிய பொருளாதார மாநாட்டிற்கு அனுசரணை வழங்கியதன் ஊடாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் குறிப்பாக தென் ஆசிய பிராந்தியம் முழுவதிலும் உள்ள எமது பங்கீடுபாட்டாளர்களுடன் பேணிவரப்படும் ஒத்துழைப்புடன் கூடிய வகையில் ஈடுபடுதல் மீண்டும் வெளிக்காட்டப்பட்டது. தெற்காசியாவிற்குள் கூட்டு செயற்பாட்டிற்கும் கற்ற பாடங்களை பரிமாறிக் கொள்வதற்கும், "நான்காவது கைத்தொழில் புரட்சி" எனும் கருப்பொருளிலின் வாயிலாக கருதப்படுவது யாது என்பதைப் பற்றிய முதலாவது பிராந்திய கலந்துரையாடல்களில் ஒன்றை ஆரம்பிக்கும் பொருட்டு ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், தனியார் துறை மற்றும் அபிவிருத்தி பங்கேற்பாளர்கள் ஆகியோர் தெற்காசிய பொருளாதார மாநாட்டினால ஒன்றுசேர்க்கப்பட்டனர். பொதுவாக நோக்குகையில் எமது ஆராய்ச்சிகின் வாயிலாக உருவாக்கப்படுகின்ற தரவுகள், ஆதாரங்கள் மற்றும் அறிவுசார் தொடர்பாடல் மற்றும் கொள்கைசார் விடயங்களில் ஈடுபடுதல் தொடர்பான செயற்பாடுகள் ஊடாக பிரச்சாரம் செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு முக்கியமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அறிக்கையின் எஞ்சிய பகுதியின் ஊடாக நாம் செயற்படும் முறை தெளிவுபடுத்தப்படுவதுடன் 2019ஆம் ஆண்டுக்குள் நாம் மேற்கொண்ட சிற்சில செயற்பாடுகள் மற்றும் அவற்றின் பெறுபேறுகள் காட்டப்பட்டுள்ளன.

கொள்கை கற்கைகள் நிறுவகத்திற்கு 2019 ஆம் ஆண்டில் புதிதாக தாபிக்கப்பட்ட புதிய நிர்வாக சபையினால் அந்நிறுவனத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின்போது உதவி மற்றும் ஒத்தாசை வழங்கப்படுவதுடன் அவ்விடயத்திற்கு நிறுவனத்தின் நிர்வாக சபைக்கு எனது நன்றியினை தெரிவிப்பதற்கு இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்கின்றேன். மேலும் பல்வேறு திறமைகளுடன் கூடிய உள்ளக ஆராய்ச்சி குழுவினதும் உதவி பதவியணியின் பங்களிப்பும் இல்லாதிருப்பின் இந்த வருடம் முழுவதும் நாம் பெற்றுக்கொண்ட வெற்றிகளையும் அடைவுகளையும் யதார்த்தமாக்கிக் கொள்வதற்கு இயலாமல் போயிருக்கக் கூடும். நாம் எமக்காகவே உருவாக்கிக் கொண்டுள்ள "அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையினை யதார்த்தமாக மாற்றிக் கொள்ளும் பொருட்டு தரவுகள், ஆதாரங்கள் மற்றும் அறிவு உருவாக்கப்படுதல்" எனும் தொலை நோக்கை ஈடேற்றிக்கொள்ளும் பொருட்டு பெரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எனது சகோதர பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

துஷ்னி வீரகோன்

ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்



அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையினை மேம்படுத்தும் விடயத்தை நோக்காகக் கொண்டு நம்பத்தகுந்த பகுப்பாய்வினை வழங்கும் பொருட்டு இலங்கையின் அரச கொள்கையின் மீது செல்வாக்கு செலுத்துவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் முதன்மையான பணியாகும். நிலைபேறான, புதிய விரிவான முறையில் பரந்துள்ள அபிவிருத்தியின் வாயிலாக சமூக பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும் திட்டவட்டமான நோக்கத்துடன் இந்நிறுவனத்தின் 2018 – 2020 ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சமமான நிலையில் உள்ளவர்களினால் மீளாய்வு செய்யப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச வெளியீடுகள் போன்ற கல்விசார் ரீதியில் நிலைநாட்டப்பட்டுள்ள தரங்களினால் எடுத்துக்காட்டப்படும் ஆராய்ச்சிகள் சார்ந்த தரத்தின் நேர்த்திமிகு தன்மையின் ஊடாக கொள்கைகள் தொடர்பாக நிறுவனத்தினை மிகவும் உயர் மட்டத்துக்கு உயர்த்துவதற்கு நிறுவனம் நோக்கம் கொண்டுள்ளது. அதனையடுத்து முறைசார்ந்த தொடர்பாடல் மற்றும் கொள்கைகள் சார்ந்த விடயங்களில் ஈடுபடுதலுடன் தொடர்புடைய செயற்பாடுகள் வாயிலாக நிறுவனத்தில் ஆராய்ச்சிகள் எவ்வாறு கொள்கைகள் மீது தாக்கம் விளைவிக்கின்றது எனும் விடயம் ஆராயப்படுகின்றது.

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் 2019 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் வாயிலாக பிரதான தொனிப்பொருள் சார்ந்த ஆறு துறைகள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அவ்வாறான ஒவ்வொரு தொனிப்பொருள் தொடர்பாகவும் மூத்த ஆராய்ச்சியாளர் ஒருவரின் தலைமையில் இயங்கும் ஆராய்ச்சிக் குழுவொன்று ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றது. கொள்கை தீர்மானங்களை மேற்கொள்வதற்கு விழிப்புணர்வு அடையும் பொருட்டு தேவையான ஆதாரங்களை வழங்குவதற்காகவும் கொள்கை வகுப்பாளர்களுக்கு பல்வேறு மாற்றுக் கொள்கைகளினால் விளையக்கூடிய தாக்கங்கள் பற்றி புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் ஒவ்வொரு தொனிப்பொருள் சார்ந்த துறையிலும் பல்வேறு ஆராய்ச்சி தலைப்புகள் ஆராய்ந்து பார்க்கப்படுகின்றது. கொள்கைகளுக்கு இசைந்தொழுகுதல், உட்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவு இல்லாமை, சுகாதார மற்றும் கல்வித் துறைகளில் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கும் விடயம் நலிவடைதல், பயிற்றுவிப்பதில் காணப்படும் பற்றாக்குறை, மின்வலு உள்ளிட்ட ஏனைய வலு மூலங்களுக்கான செலவு அதிகரித்தல் மற்றும் நிதி, நிலம் போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு காணப்படும் தடைகள் போன்ற வளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்ற மிகவும் வலுவான இடையூறுகள் தொடர்பாக பெருமளவு பகுப்பாய்வினை செய்தல் முக்கியமானதாகும். வருமானத்திலும், செல்வத்திலும் மாற்றமடையாமல் தொடர்ச்சியாக காணப்படும் சமமற்ற தன்மை, சூழலுக்கு ஏற்படும் தாக்கங்கள் மற்றும் இயற்கை வளங்கள் குறைவடைதல் முதியவர்கள் மற்றும் ஏனைய எளிதில் பாதிப்படையும் மக்களின் நலன் போன்றவை தொடர்பாக கவனம் செலுத்துவதன் வாயிலாக மீண்டும் கொள்கைகளை வகுப்பதை நோக்காகக் கொண்டு பிரதான பொருளாதார எண்ணக்கருக்கள், மாதிரிகள் மற்றும் சுட்டிகளின் தொடர்ச்சியான மீளாய்வினை மேற்கொள்ளும் தேவை உருவாக்கப்படுகின்றது.




பேரண்டப் பொருளாதாரம், வாணிபம் மற்றும் போட்டித்தன்மை.

வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி மீது தாக்கம் செலுத்துகின்ற பொருளாதார மற்றும் அரசியல் தடைகளை கையாளும் விடயத்தில் கொள்கைசார் வினைத்திறனுக்கு உதவி வழங்கும் செயற்பாடுகளும் நிறுவன ரீதியிலான நிகழ்ச்சித்திட்டங்களும் மிகவும் முக்கியமான காரணிகளாகும். அசௌகரியமானதாக இருப்பினும் தேவையானதாக அமையும் மறுசீரமைப்புகளை இனங்காணுதல், அவற்றுக்கு முன்னுரிமை வழங்குதல், அவற்றை ஆரம்பித்தல், செயற்படுத்துதல் மற்றும் தொடர்ச்சியாக பேணி வருதல் போன்ற விடயங்கள் மேற்கொள்ளப்படுவதை கொள்கை வினைத்திறன் ஊடாக உறுதிப்படுத்த முடியும்.

இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் மக்கள் பரம்பல் சார்ந்த மாற்றங்களை கருத்திற் கொள்ளும்போது பொருளாதாரத்தில் போட்டித்தன்மை, நிறுவனம் கொண்டுள்ள ஆற்றல் ஆகியவற்றை உயர்த்தும் பொருட்டு ஒழுங்குறுத்தும் மறுசீரமைப்புகளை உள்ளடக்கி, அவற்றை மேம்படுத்தப்படுத்துவதற்கு உழைப்பின் பயனுறுதி மற்றும் வினைத்திறன் ஆகியவற்றின் ஊடாக அதிகரித்த வளர்ச்சி ஏற்படுதல் வேண்டும். இவ்விடயமானது உற்பத்தி காரணிகளை மீண்டும் ஒதுக்கிக் கொடுத்தல், உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வகுதிகளை பல்வகைப்படுத்துதல், தரமுயர்த்துதல் மற்றும் விரிவாக்குதல் அத்துடன் புதிய உற்பத்தி முறைகள் மற்றும் செயன்முறைகள், பல்வேறு உள்ளீடுகளை பயன்படுத்துதல் போன்றவற்றை பரிசீலனைக்கு உட்படுத்தும் கொள்கைகளைத் தயாரிக்கும் தேவையினை உருவாக்குகின்றது.

பேரண்ட பொருளாதார கொள்கை மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புகள்



உலகளாவிய அபிவிருத்தி வலையமைப்பின் நிதியளிப்பின் கீழ் திருமதி நிக்ஷா அருணதிலக மற்றும் திருமதி பிரியங்கா ஜயவர்தன "ஊநுஞ ஆய்வுக்காக தரவுகளை பொருத்தமானதாக மாற்றியமைத்தல்" தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்டனர். நியாயமான மற்றும் நிலைபேறான வளர்ச்சிக்காக பல்வேறு நாடுகளில் காணப்படும் நிலைமைகளுடன் பெறுபேறுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வசதியளிக்கும் பொருட்டும் மிகவும் சிறந்த முறையில் நிதி வளங்களை ஒதுக்கித் தருவதற்கு உதவி வழங்கும் பொட்டும் அரச வருமானம் மற்றும் செலவினங்கள் சார்ந்த தரவுகளின் பரம்பலை பகுப்பாய்வு செய்யும் விடயத்தை இற்றைப்படுத்துதல் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

பல தடைகளுக்கு பின்னர் மிகவும் மெதுவாக நாடு மீண்டும் வழமையான நிலைக்கு மாற்றமடைந்து வரும் நிலையின் கீழ் 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் நிலை நலிவடைந்த நிலையில் இருப்பதாக "இலங்கையின் பொருளாதார நிலை – 2019" எனும் அறிக்கையில் இலங்கையின் பொருளாதார நோக்கு மற்றும் கொள்கை முன்னுரிமைகளை ஆராயும் திருமதி துக்ஷ்னி வீரகோன் எடுத்துரைக்கின்றார். இது 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் நிதியியல், அரசிறை மற்றும் செலாவணி வீதம் சார்ந்த கொள்கைகளில் மேற்கொள்ளப்பட்ட பேரண்ட மறுசீரமைப்பு செயன்முறைகளின் வாயிலாக கிடைத்த முக்கியமான நலன்களுக்கு மத்தியிலும் கூட ஏற்பட்ட நிலைமையாகும்.

தெற்காசிய வலயத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் கணிசமானளவு மந்த நிலையிலான முன்னேற்றமாக அமைந்த 3.5 வீதத்திற்கு குறைந்த வளர்ச்சியைக் கொண்ட தொடர்ச்சியான பத்து காலாண்டுக் காலத்தைக் கவனத்திற்கொளும் போது "வளர்ச்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்கான கொள்கை சார்ந்த செயற்பாடுகள் 2020 ஆம் ஆண்டிற்கான கொள்கை நிகழ்ச்சி நிரலில் ஆகக் கூடிய முன்னுரிமையை கொண்டுள்ள விடயமாக அமைதல் வேண்டுமென இந்த அறிக்கையின் வாயிலாக மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பொருளாதார விரிவாக்கத்தை ஏற்படுத்துகின்ற பேரண்ட பொருளாதார செயற்பாடுகளை உள்ளடக்கும் அவ்வாறான கொள்கை சார்ந்த செயற்பாடுகள் இலங்கையில் அவசர நடுத்தரக் கால கடன் சார்ந்த நிலைபேறான தன்மை தொடர்பான மறுசீரமைப்புகளுக்கு சமாந்தரமாக இடம்பெறுதல் வேண்டும்.

வாணிபம் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு

அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் சார்பில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் பொறுப்பேற்கபட்ட தீர்வை கட்டணங்களை குறைப்பதனால் ஏற்படும் வர்த்தக தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கான ஸ்மார்ட் உருவகப்படுத்துதல் பணியின்போது திரு ஜனகவிஜயசிறி இலங்கை பங்களாதேஷ் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றிய கூட்டு உள்நாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டார். இதற்கு மேலதிகமாக திரு ஜனக விஜயசிறி மற்றும் திருமதி நுவன்தி சேனாரத்ன அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் சார்பில் "உத்தேச இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் நன்மைகள் பற்றிய ஆரம்பக்கட்ட ஆய்வினையும்" மேற்கொண்டனர்.

ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்திக்கான அரச திணைக்களத்தின் நிதி வழங்குதலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சர்வதேச வர்த்தக நிலையத்தின் "ளுாநவுசயனநள" கருத்திட்டத்திற்கு கொள்கை கற்கைகள் நிறுவகம் செயலூக்கத்துடன் தொடர்பு கொண்டது. ளுாநவுசயனநள முரவடழமம ~ என்பது சர்வதேச வர்த்தகத்துக்கான பெண்களின் பங்கேற்புக்கு உதவுகின்ற நிறுவன சூழல் முறைமையை மதிப்பீடு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான புதிய கொள்கை கருவியாகும். மேலும் அது வர்த்தகம் மற்றும் பால்நிலை ஆகிய இரண்டிற்கும் ஏதுவாக நாடுகளுக்கிடையில் அளவிடக்கூடிய மற்றும் ஒப்பிடக்கூடிய சுட்டிகளை வழங்குகின்ற விரிவான கருவியாகவும் அமைகின்றது. இவ்விடயத்தின் பொருட்டு திரு ஜனக விஜயசிறி மற்றும் திருமதி நுவன்தி சேனாரத்ன சர்வதேச வர்த்தக நிலையத்தின் பரந்தளவிலான முயற்சியின் ஒரு பகுதியாக சவால்கள், கொள்கை அனுபவங்கள் மற்றும் சிறந்த வழக்கங்கள் ஆகியவை தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கான ஆய்வினையும் மேற்கொண்டனர்.

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஐரோப்பிய யூனியனின் நிதியளிப்பின் கீழ் செயற்படும் "இலங்கையின் வர்த்தகம் தொடர்பிலான உதவிகள்" கருத்திட்டத்தை தற்போது நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனமாகிய சர்வதேச வர்த்தக நிலையத்தின் சார்பில் திரு. கித்மினி ஹேவகே இலங்கையின் கட்டுமானங்கள், கட்டிடக்கலை மற்றும் பொறியியல்

துறைகளின் ஒழுங்குறுத்தல் பற்றிய வரைபடமிடுதலை மேற்கொண்டார். “கட்டுமானங்கள், கட்டிடக்கலை மற்றும் பொறியியல் துறைகளின் ஒழுங்குறுத்தல் மதிப்பீடு” பற்றிய ஆய்வின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் ஏற்றுமதிகளில் காணப்படும் போட்டித்தன்மைக்கும் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்குமான உயர்ந்த உள்ளார்ந்த ஆற்றல் உடைய துறைகளின் பெருமதி சேர்த்தலுக்கு உதவி வழங்குவதுடன் இலங்கையில் அனைத்தையும் உள்ளடக்கிய வர்த்தக அடிப்படையிலான வளர்ச்சி மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பிற்கு பங்களிப்பு வழங்குவதற்கு பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

முதலீடு மற்றும் நிதி

ஆசியாவின் பொருளாதாரம் 15 வருடங்களாக மக்கள் நேயமிக்க செயற்பாடுகளுக்கும் தனிநபர் சமூக முதலீட்டுக்கும் வசதி வழங்கும் சூழமைவை கருத்திற்கொண்டு திரு. கீத்மினி ஹேவகே ஹொங்காங்கில் அமைந்துள்ள சனோபகாரம் மற்றும் சமூகத்திற்கான நிலையத்தின் நிதி உதவியுடன் “மக்கள் நேயமிக்க செயற்பாட்டு சுட்டி 2020” எனும் விடயத்தை உருவாக்கினார். இந்த ஆய்வு நான்கு துறைகளைக் கொண்டது. வரி மற்றும் நிதிக் கொள்கை, ஒழுங்குறுத்தல் நடைமுறைகள், சமூக கலாசார சுற்றாடல் முறைமை மற்றும் அரச பெறுகைகள் ஆசிய பொருளாதாரங்களின் ஒப்பீட்டு சூழமைவுக்குள் மக்கள் நேயமிக்க செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முறையினை வெளிப்படுத்துவதற்கு இந்த ஆய்வு நோக்கம் கொண்டுள்ளதாக அமைந்தது.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள், கைத்தொழில்கள் மற்றும் தொழில்முயற்சி

இலங்கை அபிவிருத்தியின் அடுத்தகட்டமாக அமையும் சேவைகளை டிஜிட்டல் மயப்படுத்துதல் விடயத்திற்கு முன்னுரிமை வழங்கும் கட்டத்திற்கு அடியெடுத்து வைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதால் தொழில் முயற்சி நடவடிக்கைகளுக்கு வசதி வழங்குபவர்கள் என்ற வகையில் சமூக ஊடக தளங்களின் வகிபாகம் தொடர்பாக மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து அறிதல் அவசியமாகும். குறிப்பாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் மற்றும் இளைஞர்கள் போன்ற குழுக்களுக்கு வர்த்தக விளம்பரம், சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம் போன்ற தொழில் முயற்சி செயற்பாடுகளுக்கு சமூக ஊடக தளங்களை ஈடுபடுத்திக் கொள்வதின் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழமைவில் திரு. கித்மினி ஹேவகே மற்றும் திருமதி ஹரிணி வீரசேகர பண்புசார் மற்றும் அளவுசார் ஆகிய இரண்டு கூறுகளையும் பயன்படுத்தி தொழில் முயற்சிகளுக்கு சமூக ஊடகங்களின் சூழல் (முகநூல் மற்றும் இன்ஸ்ட்டகிராம் ஆகியவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட வகைகள்) தொடர்பாக “தொழில் முயற்சிகளுக்கு சமூக ஊடகங்கள்” எனும் மதிப்பீடு செய்யும் அடிப்படை ஆய்வினை மேற்கொண்டனர்.

தற்போது இந்நாட்டிலுள்ள ஆக்கத்திறன்வாய்ந்த கைத்தொழில்களின் பரிமாணம் மற்றும் அளவு தொடர்பாக ஒட்டுமொத்த கருத்தொன்றை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை பிரிட்டிஷ் கவுன்சிலின் நிதி வசதியின் கீழ் கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் “இலங்கையின் ஆக்கத்திறன் வாய்ந்த கைத்தொழில்களை வரைபடம் இடுவதற்கான ஆய்வு” மேற்கொள்ளப்பட்டது. ஆக்கத்திறன் வாய்ந்த கைத்தொழில் துறைக்கு காணப்படும் வரவேற்பு, அதன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் ஆகியவை தொடர்பான இடையீடுகளை திட்டமிடுவதற்கும் அதன் மூலம் அத்துறையினை மேம்படுத்துவதற்கு தேவையான கொள்கை மற்றும் மூலோபாயங்களை உருவாக்குவதற்கும் இந்த ஆய்வு உதவியது. இந்த ஆராய்ச்சிக் குழுவில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் மனோஜ் திப்பொட்டுவாவ, திலினி ஹிரிமுத்துகொடகே மற்றும் நிமேக்ஷா திசாநாயக்க ஆகியோர் உள்ளடங்கி இருந்தனர்.

புலமைச் சொத்து

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் நிதி வசதியின் கீழ் திருமதி. திலனி ஹிரிமுத்துகொடகே “இலங்கைக்கான தேசிய புலமைச் சொத்து பற்றிய கொள்கை” தொடர்பாக ஆராய்ச்சியொன்றை மேற்கொண்டார். இலங்கைக்கான முழுமையான புலமைச் சொத்து கொள்கை ஒன்றை உருவாக்குதல் இதன் நோக்கமாகும். இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் பற்றிய ஆற்றலை மேம்படுத்துவதற்கு உதவுகின்ற மிக உயர்ந்த வழக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதை இந்த ஆய்வு நோக்காகக் கொண்டுள்ளது.

வெளியீடுகள்

“நான்காம் கைத்தொழில் புரட்சியில் இலங்கையின் பொருளாதாரத்தை மாற்றியமைத்தல்” எனும் தொனிப்பொருளின் கீழ் வெளியிடப்பட்ட கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் மிகப்

பிரதான வருடாந்த அறிக்கையாக அமையும் “இலங்கையின் பொருளாதார நிலை” எனும் அறிக்கையின் ஊடாக இலங்கையின் எதிர்கால பொருளாதார வளர்ச்சியில் மிகவும் முக்கியமான அம்சங்களாக கருதப்படுகின்ற நான்காவது பொருளாதார புரட்சியில் தொழில்நுட்பங்கள் செயலூக்கம் மிக்க வகையில் தொழிற்படும் பல்வேறு துறைகளாகிய தொழில் உலகம், கல்வி, புலம்பெயர்தல், பால்நிலை, சுகாதாரம், நிதிசார் ரீதியில் அனைவரையும் உள்வாங்குதல், வர்த்தகம், விவசாயம் மற்றும் காலநிலை மாற்றம் உள்ளிட்ட ஏனைய துறைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. மேலும், இந்த வெளியீட்டின் வாயிலாக நாட்டின் பொருளாதார செயலாற்றுகை தொடர்பாக மிகவும் முக்கியமான மதிப்பீடொன்றும், வளர்ச்சி மற்றும் பேரண்ட பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு சமீபத்திய எதிர்காலம் தொடர்பான தொலைநோக்கும் முன்வைக்கப்பட்டது. “இலங்கையின் பொருளாதார நிலை - 2019” அறிக்கைக்கு பங்களிப்பு வழங்கி திருமதி துக்ஷ்னி வீரகோன் “இலங்கையின் பொருளாதார செயலாற்றுகை மற்றும் தொலைநோக்கு” தொடர்பாக கட்டுரை ஒன்றை எழுதினார். இதற்கு மேலதிகமாக, திரு. ஜனக விஜயசிறி “டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகத்தின் எதிர்காலம்” தொடர்பாகவும் திருமதி ஹரிணி வீரசேகர “உலகளாவிய பொருளாதார அபிவிருத்திகளும் இலங்கை மீது அதனூடாக ஏற்படுத்தப்படும் தாக்கங்கள்” தொடர்பாகவும் திரு. கித்மின ஹேவகே “நான்காவது கைத்தொழில் புரட்சிக்கு தயாராகுதல்” தொடர்பாகவும் ஆக்கங்களை படைத்தனர்.

இந்த வருடத்திற்குள் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் அமரர் கலாநிதி சமன் கெலேகம அவர்களின் ஞாபகார்த்தமாக “மோதலுக்கு பின்னரான சூழமைவில் அபிவிருத்தியின் போது உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்கள் அத்துடன் வாய்ப்புகளை முகாமைத்துவம் செய்தல்: இலங்கையிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்கள்” தொடர்பாக சர்வதேச மட்டத்தில் வெளியிடப்பட்ட நூலொன்று பிரசுரிக்கப்பட்டது. திருமதி துக்ஷ்னி வீரகோன் மற்றும் திரு. சிசிர ஜயசூரியவினால் தொகுக்கப்பட்டு ஸ்பிரின்ஞரினால் வெளியிடப்பட்ட இந்நூலில் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்ற இலங்கைப் பொருளியல் நிபுணர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகள் உள்ளடங்கி இருக்கின்றன. சமூக அரசியல் மறுசீரமைப்புக்கு முயற்சி செய்கின்ற நிலையில் தளம்பும் நிலையிலுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட அத்துடன் சிக்கல் மிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் சவால்களைக் கொண்ட சூழமைவொன்றில் மோதலுக்கு பின்னரான சூழமைவில் இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பான கதைகள் மூலம் கற்றுக் கொள்ளக் கூடிய பாடங்கள் இந்த வெளியீடுகளின் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது ஆராய்ச்சியாளர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் மற்றும் அபிவிருத்திசார்ந்த தொழில்வாண்மையாளர்களுக்கும் பயனுடைய நூலாகும்.

அரசிறை ஆதிக்கம் இலங்கையின் பேரண்ட பொருளாதாரச் சூழலில் தொடர்ச்சியாக காணப்படும் ஒரு அம்சமாகும். ஸ்திரமற்ற பேரண்ட பொருளாதாரம் உச்சமட்டத்தில் காணப்படும் நிலையில் இதனை காணக்கூடியதாக உள்ளதுடன் நாடு சென்மதி நிலுவை சார்ந்த நெருக்கடிக்கு அடிக்கடி முகம் கொடுத்துள்ளது. துக்ஷ்னி வீரகோன், உற்சவ் குமார் மற்றும் ரொசெல் டயிம் ஆகியோரினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தென்னாசிய ஆராய்ச்சிக் கட்டுரை தொகுதியின் கீழ் “இலங்கையின் பேரண்ட பொருளாதார சவால்கள்: இரண்டு பற்றாக்குறைகளின் கதை” எனும் கட்டுரையின் வாயிலாக இலங்கையின் அரசிறை பற்றாக்குறை மற்றும் நடைமுறை கணக்கின் பற்றாக்குறை ஆகிய இரண்டு வகையிலான பற்றாக்குறைகளின் அண்மைக்கால வரலாறு தொடர்பான விபரமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

திருமதி துக்ஷ்னி வீரகோன் மற்றும் திரு ஜனக விஜயசிறி ஆகியோரினால் “பட்டுப் பாதை, கடன் மற்றும் இராஜதந்திரம்: சீனா - இலங்கை பொருளாதார தொடர்புகளில் காணப்படும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள்” தொடர்பான விவாதத்திற்கு உட்படுத்தக்கூடிய கட்டுரையினை முன்வைத்தனர். இக்கட்டுரையின் வாயிலாக இலங்கை சீனாவுடன் கொண்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் தொடர்புகளுக்கு உந்துசக்தி வழங்குகின்ற தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய புவியியல் அரசியல் மாற்றங்கள் ஆராய்ந்தறியப்படுவதுடன் சீன கடன் தொடர்பாக கடன் பொறி என அழைக்கப்படுகின்ற சீன கடன் தொடர்பாக எழுந்துள்ள கதைகளை விளித்துரைக்கின்றது.

திருமதி சதுர்கா கருணாநாயக்க வணிகம் மற்றம் சமூக ஆராய்ச்சி தொடர்பிலான சர்வதேச சஞ்சிகைக்கு “பகட்டான நுகர்வு பரிமாணங்களுக்கிடையில் காணப்படும் இடைத்தொடர்புகள் – கைக்கடிகாரம் மற்றும் வீடுகள் ஊடாக மற்றையவர்கள் மத்தியில் தங்களை உயரத்திக்காட்டுதல் மற்றும் போலியான உயர்வு பற்றிய ஆழமாக ஆராய்தல்” எனும் கட்டுரையை வரைந்தார். மேலும், அவர். எச்.கன்னங்கரவுடன் இணைந்து இலங்கை வயம்ப பல்கலைகழகத்தின் பல்கலைக்கழக பொருளியலாளர்களின் இலங்கை சங்கத்தினால் வெளியிடப்படுகின்ற பொருளாதார வலுவூட்டல்: சவால்கள் மற்றும் எதிர்கால பயணம் தொடர்பான ஒரு வெளியீட்டிற்கு

"இலங்கையின் பகட்டான நுகர்வுக்கு காரணமாக அமையும் சமுதாய நிலைமாற்றத்திற்கான ஊக்கிகள் – சொகுசு வாகன உதாரணங்கள்" எனும் ஆக்கத்தை எழுதினார்.

முக்கியமான நிகழ்வுகள்

அபிவிருத்தி பொருளியல் மற்றும் நிலைபேறான தன்மைக்கான நிலையம் மற்றும் அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்தின் தென்னாசிய ஆராய்ச்சி வலையமைப்புடன் இணைந்து கொள்கை கற்கைகள் நிறுவகம் "தெற்காசியாவின் பொருளாதார அபிவிருத்தி" தொடர்பான மாநாடொன்றை ஏற்பாடு செய்தது. 2019 சனவரி 07 – 08 ஆகிய திகதிகளில் களுத்துறையில் நடாத்தப்பட்ட இம் மாநாடு தெற்காசிய நாடுகளின் நிபுணர்களை ஒன்றிணைத்த சந்தர்ப்பாக அமைந்தது. இம் மாநாட்டின் ஊடாக எழுமாறான கள ஆய்வுகள், சீரற்ற கள சோதனைகள், நுகர்வு இடஞ்சார்ந்த விநியோகம், மற்றும் பல பரிமாண வறுமை தொடர்புகள் மற்றும் பிற நுண் புள்ளிவிபரவியல் சார்ந்த பொருளியல் பகுப்பாய்வு போன்ற புதிய ஆராய்ச்சு முறைகளை பயன்படுத்தி பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு ஒத்தாசை வழங்கும் புதிய கொள்கைகளின் தாக்கம் ஆராயப்பட்டது. பிராந்தியத்தில் புதிய அறிவை பரிமாற்றிக்கொள்ளுதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளுதல் இம்மாநாட்டின் ஒட்டுமொத்த நோக்கமாக அமைந்தது.

உலக வங்கி, இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட "தெற்காசியாவின் வெளிவாரியான எளிதில் பாதிப்படையும் தன்மைகள் பற்றிய பிராந்திய மாநாடு" பெப்ரவரி 28 – மார்ச்சு 01 ஆகிய திகதிகளில் இலங்கை மத்திய வங்கியில் நடாத்தப்பட்டது. இம் மாநாட்டின் வாயிலாக இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகளின் பொருளாதாரங்கள் மீது வெளிவாரியான துறைகளின் விருத்தியின் ஊடாக ஏற்படுத்தப்படுகின்ற பேரண்ட பொருளாதார தாக்கம் வலியுறுத்தப்பட்டதுடன் அண்மைக்கால உலகளாவிய நிலைமாற்றங்களின் கீழ் தெற்காசிய பிராந்தியத்திற்கான பொருளதார நோக்கு கலந்துரையாடப்பட்டது.

மேலும், கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட "ளுயுநுளு ஓஜஜ) தெற்காசிய பொருளாதார மாநாடு" 2019 செப்டெம்பர் மாதம் 26 – 27 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடாத்தப்பட்டது. இம் மாநாட்டில் "நான்காம் கைத்தொழில் புரட்சியில் தெற்காசியாவின் எதிர்காலத்தை சீரமைத்துக்கொள்ளுதல்" எனும் தொனிப்பொருள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. நான்காம் பொருளதார புரட்சியின் பெறுபேறுகளை அடைந்துகொள்ளும் போதும் பல்தரப்பு கலந்துரையாடல் வாயிலாக ஒத்துழைப்பிற்கான ஆற்றல்களைக் கொண்ட வழிமுறைகளை தேடிச்செல்லும் பயணத்தின் போதும் தெற்காசியாவிற்கான எதிர்பார்ப்புகள் மற்றும் சவால்கள் மற்றும் இந்த வலயத்திற்கு தனது மக்களின் தனியான மற்றும் கூட்டான நலனை மேம்படுத்திக்கொள்வதற்கு நான்காம் கைத்தொழில் புரட்சியின் போது அர்த்தபுஷ்டிமிக்க வகையில் தங்களது எதிர்காலத்தை சீரமைத்துக்கொள்ளக்கூடிய முறை இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

கொள்கை சார்ந்த விடயங்களில் ஈடுபடுதல்

குழுக்கள்

2019 ஆம் ஆண்டில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தில் பின்வரும் கொள்கை குழுக்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதின் ஊடாக ஆராய்ச்சி உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

திருமதி.துஷ்னி வீரகோன் மற்றும் திருமதி. நிக்ஷா அருணதிலக ஆகியோர் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் கூட்டப்பட்ட ஆராய்ச்சி மேற்பார்வை குழுவிலும் புள்ளிவிபரவியல் மற்றும் குடித்தொகை மதிப்பீட்டு திணைக்களத்தை மீள்கட்டமைப்பதற்காக பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல்கள் அமைச்சினால் தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவிலும் பங்கேற்றனர்.

திருமதி. நிக்ஷா அருணதிலக மற்றும் திரு. கித்மின ஹேவகே பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சினால் தாபிக்கப்பட்ட தேசிய கணக்குகளை தயாரித்தல் விடயத்தை முன்னேற்றுவதற்கான செயலணியில் சேவையாற்றினர்.

இதற்கு மேலதிகமாக, திருமதி. துஷ்னி வீரகோன் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் வர்த்தக விளைத்திறன் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாகவும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையில் நியமிக்கப்பட்ட உறுப்பினராகவும் பணியாற்றினர்.

திரு. ஜனக விஜயசிறி அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் கூட்டப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை பற்றிய ஆலோசனைக் குழுவிலும் பணியாற்றினர்.

சமர்ப்பணம் மற்றும் வளப்பகிர்வுக்கான கலந்துரையாடல் குழு

உள்நாட்டு மற்றும் பிராந்திய ரீதியில் நடாத்தப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் இலங்கை பேரண்ட பொருளாதார கொள்கை மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்பு தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் பற்றி உரையாற்றினர்

- இலங்கை வர்த்த சம்மேளத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்ட "பொருளாதாரம், துறைசார் மீளாய்வு மற்றும் எதிர்கால நோக்கு 2019" பற்றிய கருத்தரங்களில் திருமதி. துக்ஷ்னி வீரகோன் அவர்கள் வளப்பகிர்வாளர்கள் குழாமின் உறுப்பினராக பணியாற்றினார் (சனவரி)
- திருமதி துக்ஷ்னி வீரகோன் "தெற்காசியாவில் காணப்படும் வெளிவாரியான எளிதில் பாதிப்படையும் தன்மைகள் பற்றிய பிராந்திய மாநாட்டில்" தெற்காசியாவின் இரட்டை பற்றாக்குறைகள் பற்றிய அனுபவ நுண்ணறிவு" எனும் அமர்வில் தலைமை வகித்தார். உலக வங்கி, இலங்கை மத்திய வங்கி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்டது. (பெப்ரவரிஃமார்ச்சு)
- திருமதி துக்ஷ்னி வீரகோன் "நாங்கள் எத்திசையை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றோம்" 2019 வரவுசெலவு திட்டம் பற்றி நிபுணர்களின் நுண்ணறிவுப் பார்வை" எனும் கலந்துரையாடல் அமர்வின் வளப்பகிர்வாளர்கள் குழாமின் உறுப்பினராக பணியாற்றினார். கொழும்பில் நடாத்தப்பட்ட இந்த அமர்விற்கு அரசியல் பொருளாதாரம் பற்றிய இலங்கை சங்கத்தினால் அனுசரணை வழங்கப்பட்டது (மார்ச்சு).
- திருமதி. துக்ஷ்னி வீரகோன் பட்டைய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலொன்றில் "2019 வரவு செலவுத் திட்டத்தின் விசேட அம்சங்கள்: வரி முன்மொழிவுகள் மற்றும் வணிகம் மற்றும் பொருளாதாரத்தின் மீது அதன் மூலம் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள்" எனும் அமர்வில்



வளப்பகிர்வாளர் குழாத்தில் உறுப்பினராக பணியாற்றினார். (மார்ச்சு)

- திரு.கித்மின ஹேவகே இலங்கை பட்டைய கணக்காளர்கள் நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்ட "இலங்கையின் பொருளதாரம் எத்திசையை நோக்கி பயணிக்கின்றது" எனும் கலந்துரையாடலை வழிநடாத்தினார்.
- திருமதி. துக்ஷ்னிவீரகோன் கொழும்பு செங்கிரி லா ஹோட்டலில் நடைபெற்ற "எச்.எஸ். பீ.சீ நிறைவேற்றுத் துறையினரின் சந்திப்பு: 2019 மற்றும் அதனையடுத்து உலகளாவிய பொருளாதாரம் மற்றும் அந்நியச் செலாவணி நோக்கு" நிகழ்ச்சித்திட்டத்தில் வளப்பகிர்வாளர்கள் குழாமின் உறுப்பினராக பணியாற்றினார். (ஏப்பிறல்)
- கொழும்பில் "ஊவு ஊடுளுயு யுளயை குசழவெநைச அமைப்பு 2019" நிகழ்ச்சித்திட்டத்தில் திருமதி. துக்ஷ்னி வீரகோன் "இலங்கையின் பேரண்ட பொருளாதாரத்தின் தொலைநோக்கு" பற்றிய அமர்வில் கலந்துரையாடல் குழாமின் உறுப்பினராக பணியாற்றினார் (யூன்)
- ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒழுங்குசெய்யப்பட்டு இந்துனீசியாவின் ஜகர்தா நகரில் நடைபெற்ற "பொருளதார உலகமயமாக்கல் புள்ளிவிபரம்" பற்றிய பிராந்திய நிகழ்ச்சித்திட்டமொன்றில் திருமதி. ஹரினி வீரசேகர "வரி விதம் மற்றும் வரி செலுத்தாமை: இலங்கையின் எல்லை வரி செலுத்தாமை பற்றிய அனுபவ ரீதியிலான ஆய்வு" எனும் தலைப்பின் கீழ் சமர்ப்பணமொன்றை முன்வைத்தார் (யூன்)
- திருமதி துக்ஷ்னி வீரகோன் மார்க நிறுவகம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்ட "பொதுபடு கடன்" பற்றிய புலமைசாலிகள் குழுக் கலந்துரையாடலை வழிநடாத்தினார் (யூலை)
- கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் அந்நிறுவகத்தில் நடாத்தப்பட்ட புகையில் பாவனையை கட்டுப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தில் "ஆதரித்து வாதாடும் குழு



செயலமர்வு" போது திருமதி சாமினி திலங்கா "வருமானம் மற்றும் விலைக்கு அமைவாக புகைத்தல் பொருட்களின் மீதான வரியும் அதிகரிக்கப்பட வேண்டும்" எனும் தலைப்பில் சமர்ப்பணமொன்றை முன்வைத்தார்.(நவம்பர்)

- இலங்கை பட்டைய கணக்காளர்கள் நிறுவகத்தின் அழைப்பின் பேரில் திருமதி. துக்ஷ்னி வீரகோன் "இலங்கையின் வரிக்கொள்கை, இறைவரி ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சவால்கள்" பற்றி 23 ஆம் வருடாந்த வரி சார்ந்த உரையினை கொழும்பில் ஆற்றினார். (டிசெம்பர்)

பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், கலந்துரையாடல் குழாம்கள் மற்றும் மன்றங்களில் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் வர்த்தம் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பு தொடர்பான பிரச்சினைகள் பற்றி வலியுறுத்தினர்.

திருமதி துக்ஷ்னி வீரகோன் பங்களாதேஷ் டாகா நகரில் நடைபெற்ற "பொருளாதார மாதிரிப்படுத்தல் பற்றிய தெற்காசிய வலையமைப்பின் பொருளாதார நிபுணர்களின் 4 ஆம் வருடாந்த மாநாடு – 2019"நிகழ்வின் போது "புதிய சவால்களை கட்டுப்படுத்துதல்: அனைவரையும் உள்வாங்கிய அபிவிருத்தி, வர்த்தகம் மற்றும் நிதி – தெற்காசிய கண்ணோட்டம்" எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற கலந்துரையாடலில் வளப்பகிர்வாளர் குழாமின் உறுப்பினராக பணியாற்றினார் (பெப்ரவரி)

- இந்தியாவில் புதுடில்லியில் தெற்காசிய பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "தெற்காசியாவின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான ஐந்தாவது சர்வதேச மாநாடு" நிகழ்வில் திருமதி துக்ஷ்னி வீரகோன் "அபிவிருத்தியடைந்து வரும் தெற்காசியா: இப்பொழுது எந்த பாதையில்: எனும் அமர்வில் வளப்பகிர்வாளர் குழாமின் உறுப்பினராக பணியாற்றினார் (பெப்ரவரி)
- "பட்டுப் பாதை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கை: அதிலுள்ள முக்கியத்துவம் யாது என்பது தொடர்பாக உண்மையான தெளிவினை பெற்றுக்கொள்ளுங்கள்" எனும் தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்டத்தில் திரு. ஜனக விஜயசிறி "பட்டுப்பாதை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கைக்கு அதன் மூலம் ஏற்படும் தாக்கங்கள்" எனும் தலைப்பின் கீழ் சமர்ப்பணமொன்றை முன்வைத்தார். கொழும்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித்திட்த்திற்கு முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம் மற்றும் பட்டைய வழங்கல் மற்றும் போக்குவரத்து நிறுவகத்தின் அனுசரணை வழங்கப்பட்டது. (பெப்ரவரி)
- "உத்தேச இலங்கை – தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நலன்களை மதிப்பீடு செய்தல்" பற்றிய தேசிய செயலமர்வில் கலந்துகொண்ட திரு.ஜனக விஜயசிறி அந்நிகழ்வில் "இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்த உடன்படிக்கையின் ளுஆயுசுவு பகுப்பாய்வு" எனும் தலைப்பில் சமர்ப்பணமொன்றை முன்வைத்தார். கொழும்பு வாணிப திணைக்களத்தினால் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுசரணை வழங்கப்பட்டது (மார்ச்)
- திரு. கித்மிண ஹேவகே இளம் தொழில்வாண்மையாளர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு கொழும்பு, ஹெச்சில் நடாத்தப்பட்ட "பிரித்தானியா ஐரோப்பா யூனியனிலிருந்து விலகிக்கொள்ளுதல் மற்றும் இலங்கை பொருளாதாரத்தின் மீது அதனால் விளையும் விளைவுகள்" பற்றிய பகிரங்க உரைகளில் பிரதான உரையினை ஆற்றினார் (மார்ச்)
- "உலகளாவிய ஒருங்கிணைவுக்காக வர்த்த கொள்கைகளை ஈடுபடுத்திக்கொள்ளுதல்: ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான பொது நலவாய நாடுகளின் ஆலோசனை அமர்வு" எனும் மாநாட்டில் திருமதி. துக்ஷ்னி வீரகோன் "உட்கட்டமைப்பு, நிதியளித்தல் மற்றும் பட்டுப்பாதை நிகழ்ச்சித்திட்டம்: எழுச்சிபெறும் பொருளாத்திற்கான பாடங்கள்" எனும் தலைப்பின் கீழ் ஆராய்ச்சி கட்டுரையொன்றை முன்வைத்தார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சிற்கு பொநலவாய நாடுகளின் அமைப்பின் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் தெற்காசிய கற்கைகள் நிறவகத்தினால் அனுசரணை வழங்கப்பட்டது.
- "7 ஆவது சீன – தென் மற்றும் கிழக்காசிய புலமைசாலிகள் அமைப்பின் " சீனா மற்றும் இந்து சமுத்திரத்திலுள்ள நாடுகளுக்கிடையில் பொருளாதார ஒத்துழைப்பு" எனும்



அமர்வில் திருமதி துக்ஷ்னி வீரகோன் "பட்டுப்பாதை திட்டத்திற்காக நிதிவசதிகளை வழங்குதல்: இலங்கையிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள்" எனும் தலைப்பின் கீழ் சமர்ப்பனமொன்றை முன்வைத்தார். சீனாவின் குன்மிங்கில் நடைபெற்ற இந்த அரங்கிற்கு யுனான் சமூகவியல் கல்விக் கல்லூரியினால் அனுசரனை வழங்கப்பட்டது. (யூன்)

- "தெற்கு – தெற்கு மற்றும் முக்கோண ஒத்துழைப்பு: டீயூயூ40 மாநாட்டின் பின்னரான கட்டத்தில் புதிய வாய்ப்புகள் மற்றும் புதிய பங்குடைமைகளை ஆராய்தல்" பற்றிய மாநாட்டில் திருமதி துக்ஷ்னி வீரகோன் தெற்காசிய ஒத்துழைப்பு சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தில் (ளுயுஊநூ) "தெற்காசிய ஒத்துழைப்பு சுற்றாடல் திட்டத்தில் தெற்காசியாவைப் பற்றிய கலந்துரையாடல் அரங்கு" மற்றும் "அபிவிருத்தி ஒத்துழைப்பின் பயனுறுதிக்கான புதிய அணுகுமுறைகள்" பற்றிய வட்ட மேசை கலந்துரையாடலில் கலந்துரையாடல் குழாமின் அங்கத்தவராக கலந்துகொண்டார். இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்ற இந்த மாநாடு ரிசர்வ் எண்ட் இன்போமேக்ஷன் சிஸ்டம்ஸ் எனும் ஆராய்ச்சி நிறுவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டது (ஆகஸ்ட்)
- திரு.ஜனக விஜயசிறி அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட "இந்திய சந்தையை வெற்றிக்கொள்ளுதல்" எனும் நிகழ்ச்சியில் கலந்துரையாடல் குழாமின் உறுப்பினராக பங்கேற்றார் (ஆகஸ்ட்)
- மியன்மாரில் யென்கொன்னில் நடைபெற்ற "உலகளாவிய பெறுமதித் தொடர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி" தொடர்பான ஆசிய அபிவிருத்தி வங்கியின் – ஆசிய புலமைசாலிகள் சபையின் அபிவிருத்தி அரங்கு – 2019 நிகழ்ச்சித்திட்டத்தில் திருமதி துக்ஷ்னிவீரகோன் "உலகளாவிய மற்றும் பிராந்திய பெறுமதி தொடர் மீது பிராந்திய ஒருங்கிணைதலின் தாக்கம்" பற்றிய அமர்வினை வழிநடாத்தினார். (அக்டோபர்)
- "தெற்காசிய நிலைபேறான அபிவிருத்திக்கான பிராந்தி ஒத்துழைப்பு" பற்றிய கொள்கை கலந்துரையாடலில் திரு. அதுல சேனாரத்ன "புதிய உலகளாவிய சூழமைவில் தெற்காசிய பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பிற்கு காணப்படும் உள்ளார்ந்த ஆற்றல்கள் மற்றும் சவால்கள்" பற்றிய கலந்துரையாடலில் கலந்துரையாடல் குழாமின் உறுப்பினராக பணியாற்றினார். ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசிய அலுவலகம் மற்றும் பங்களாதேக்ஷ் சர்வதேச மற்றும் மூலோபாய கற்கைகள் நிறுவகம் ஒன்றிணைந்து பங்களாதேக்ஷ் டாகா நகரத்தில் மேற்படி நிகழ்ச்சி ஒருங்குசெய்யப்பட்டது. (டிசெம்பர்).
- கொழும்பு பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு கொழும்பில் நடாத்தப்பட்ட "பட்டுப்பாதை" நிகழ்ச்சியின்போது முதலீடுகள் மற்றும் நிதி பற்றிய கருத்துதெரிவித்த திரு. கித்மினி ஹேவகே "இலங்கையின் மோதலுக்கு பின்னரான சூழலில் அபிவிருத்திக்கான நிதிவசதிகள்" எனும் தலைப்பில் நடைபெற்ற கல்விமான்கள் மன்றத்தின் கலந்துரையாடலில் கலந்துகொண்டார். (பெப்ரவரி). தாய்லாந்து பாங்கொக் நகரத்தில் நடைபெற்ற ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் "ஆசிய பசுபிக் புலமைசாலிகள் குழுவின் மாநாட்டில்" திருமதி துக்ஷ்னிவீரகோன் "புலமைசாலிகள் குழுவிற்கு நிதி வழங்குவதற்கு புதிய மூலங்கள் மற்றும் மூலோபாயங்கள்" எனும் அமர்வினை வழிநடாத்தினார். (நவம்பர்)
- "கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் புதிய சிந்தனையாளர்களின் மாநாடு – 2019" நிகழ்ச்சித்திட்டத்தில் திரு.கித்மின ஹேவகே – "தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார மாற்றம்" பற்றிய கலந்துரையாடல் குழாமின் கலந்துரையாடலொன்றை வழிநடாத்தினார் (மார்ச்)
- பிரித்தானிய கவுன்சிலின் "ஆக்கபூர்வமான பொருளாதார அமைப்பினால்"

ஒழுங்குசெய்யப்பட்டு கொழும்பு பிரித்தானிய கவுன்சிலில் நடாத்தப்பட்ட "இலங்கையின் ஆக்கபூர்வமான கைத்தொழில்களை வரைபடமிடுதல்" பற்றிய செயலமர்வில் திருமதி. திலினி ஹிரிமுத்துகொடவினால் சமர்ப்பணமொன்று முன்வைக்கப்பட்டதுடன் அந்நிகழ்வில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கும், கைத்தொழில்களுக்கும் மற்றும் தொழில்முயற்சிகளுக்கு ஏதுவான பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன.

வலைப்பதிவு கட்டுரைகள்

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் சர்வதேச தளங்களுக்கும் உள்நாட்டு தளங்களுக்கும் காலத்துக்கேற்ற பிரச்சினைகள் தொடர்பான வலைப்பதிவு கட்டுரைகளை வரைந்தனர். திருமதி. துக்ஷ்னி வீரகோனின் கிழக்காசிய அரங்கிற்கு பேரண்ட பொருளாதார கொள்கை மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புகள் தொடர்பான ஆக்கமாகிய "இலங்கையின் அரசியல் பிரச்சினைகள் ஊடாக பலவீனமான பொருளாதரத்தை இடர்வரு நிலைக்கு உள்ளாக்குகின்றன" (சனவரி). சிசிற ஜயசூரிய உடன் இணைந்து உருவாக்கிய ஆக்கம் "இலங்கையின் கடன் பிரச்சினை சீனாவினால் உருவாக்கப்பட்டதல்ல" (பெப்ரவரி). "இலங்கையின் துறைமுறைகங்களுக்காக பிராந்தியம் போட்டியிடுதல்".(யூன்) மற்றும் "இலங்கைக்கு புதியதொரு திசை" எனும் வலைப்பதிவு கட்டுரையொன்றும், டோக்கிங் இகோனமிக்ஸ் சஞ்சிகைக்காக வரையபட்ட "இலங்கை – சீன பொருளாதார தொடர்புகளை முகாமைத்துவம் செய்தல்" பட்டுப்பாதை, கடன் மற்றும் இராஜதந்திரம் (சனவரி) மற்றும் "கிரயத்தை கணிப்பீடு செய்தல்: பயங்கரவாதம் மற்றும் இலங்கை பொருளாதாரத்திற்கு அதனால் விளையும் தாக்கங்கள்" (மே) ஆகிய வலைப்பதிவு கட்டுரைகளும் இதில் உள்ளடங்கியிருந்தன.

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் இந்த வருடம் முழுவதிலும் தொழில்நுட்பம் மற்றும் நான்காம் கைத்தொழில் புரட்சி தொடர்பாக கவனம் செலுத்தி டோக்கிங் இகோனமிக்ஸ் சஞ்சிகைக்கு பங்களிப்பு வழங்கினர்.

- திருமதி நிபுணி பெரேரா மற்றும் திருமதி சிந்தனி சூரியமுதலி "தொழில்நுட்பத்தின் ஊடாக இலங்கையின் பொருளாதார மாற்றத்திற்கு கொள்கைகள் ஊடாக வழிசமைத்தல்" தொடர்பாக கட்டுரையொன்றை வரைந்தார். (ஏப்பிறல்)
- திரு. கித்மின ஹேவகே, திருமதி தமித்ரி முணசிங்கவுடன் இணைந்து "தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம்: இலங்கையை நான்காவது கைத்தொழில் புரட்சிக்கு இட்டுச்செல்வதற்கு தயாரா?" எனும் தலைப்பின் கீழ் வலைப்பதிவு கட்டுரையொன்றை ஆக்கினார் (ஏப்பிறல்)
- திருமதி. அக்ஷானி அபயசேகர "நான்காம் கைத்தொழில் புரட்சி யுகத்தில் சுபீட்சத்தை அடைந்துகொள்ளுதல்: இலங்கைக்குள்ள வாய்ப்புகளும் சவால்களும்" தொடர்பாக வலைப்பதிவு கட்டுரையொன்றை எழுதினார்.
- திருமதி.ஹரினி வீரசேகர மற்றும் திருமதி தினுகா பரணவிதான ஆகியோர் ஒன்றிணைந்து "பொருளாதார வாய்ப்புகளை டிஜிட்டல்மயப்படுத்துதல்: இலங்கை தொழில்முயற்சியாளர்களே, உள்நுழையுங்கள்!" எனும் கட்டுரையை எழுதினார் (ஏப்பிறல்)
- "மூழ்குவதா, இன்றேல் நீந்துவதா? நான்காவது கைத்தொழில் புரட்சியில் இலங்கை" எனும் தலைப்பின் கீழ் கித்மின ஹேவகே வலைப்பதிவு கட்டுரையொன்றை எழுதினார் (யூன்)
- ஆல றுயல ழச வாந உரயறநன: (5ப) தொழில்நுட்பத்தின் ஆதிக்கத்திற்கு உலகளாவிய போர் மற்றும் இலங்கைக்கு அதனால் விளையும் தாக்கங்கள்" பற்றி கட்டுரையொன்றை எழுதி திருமதி தமித்ரி முணசிங்க தனது பங்களிப்பினை வழங்கினார். (யூன்)
- திருமதி ஹரினி வீரசேகர "நான்காம் கைத்தொழில் புரட்சியில் புத்தாக்கம் மற்றும் தடைகள் ஆகியவற்றிற்கு மத்தியில் தெற்காசியாவின் பயணம்" எனும் கட்டுரையை எழுதினார் (அக்டோபர்)
- திரு.மலித குணரத்ன "21 ஆம் நூற்றாண்டில் புதிய பணம்: இலங்கைக்கு தரவு பகுப்பாய்வாளர்களின் தேவை (டிசெம்பர்) மற்றும் —யு டீழழஉம வழ டிந ருஉொயனெந? – முறைமையின் தரவுகளை மாற்ற இயலாதவாறு தரவுகளை அறிக்கையிட்டு வைக்கக்கூடிய முறையையொன்றை இலங்கையில் நடைமுறைப்படுத்துதல்" (டிசெம்பர்) எனும் கட்டுரையை எழுதினார்.

மேலும், திருமதி ஹரினி வீரசேகர "இலங்கையில் களவாக புகைத்தல் பொருட்களை விற்பனைசெய்தல்" பெருமளவு பிரச்சாரம் மற்றும் யதார்த்தம்" எனும் தலைப்பின் கிழ் (அக்டோபர்), திருமதி நிக்ஷா அருணதிலக மற்றும் திருமதி. சாமினி திலங்கா ஆகியோர் ஒன்றிணைந்து "புகையிலைப் பாவனையை கட்டுப்படுத்தும் விடயத்தில் வரியின் வகிபாகம்: இலங்கை அதனை சரியான முறையில் புரிந்துகொண்டுள்ளதா? எனும் தலைப்பின் கீழும் (டிசெம்பர்) கட்டுரையொன்றை ஆக்கினர்.

திரு. கித்மிண ஹேவகே "பிரித்தானியாவின் பாரிய பிரிவு: பிரித்தானியா ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிந்துசென்றதின் திடீர் மாற்றத்தை புரிந்துகொள்ளுதல்" பற்றிய கட்டுரையை ஆக்கினார் (பெப்வரி)

திருமதி திலினி ஹிரிமுத்துகொட "யாருக்கு என்ன உரித்தாகும்? இலங்கையின் புலமைச்சொத்து உரிமைகளின் நடைமுறைகள் நான்காம் கைத்தொழில் புரட்சிக்கு தயாரா? எனும் தலைப்பின் கீழ் புலமைச் சொத்துக்கள் பற்றிய பிரச்சினையை விளித்துரைக்கும் ஆக்கமொன்றை எழுதினார் (செப்டெம்பர்)

டோகிங் இகோனமிக்ஸ் வலைப்பதிவுக்கு எழுதப்பட்ட அனைத்து ஆக்கங்களும் பிரதான பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் பிரசுரிக்கப்பட்டன.

ஊடகங்கள்

திருமதி துஷ்னிவீரகோன் தாய்லாந்தின் வுஏ தொலைக்காட்சி சேவைக்கு "இலங்கை – சீனா உறவுகள் மற்றும் கொழும்பு துறைமுக நகரம்" எனும் தலைப்பின் கீழ் நேர்காணலொன்றை வழங்கினார். வாநை குசழவெநைச ழளவ பத்திரிகை "சீன கடன் மற்றும் இராஜதந்திரம் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சுற்றாடலை அமிழ்த்திக்கொண்டு இருக்கின்றது" எனும் ஆக்கத்தில் "பட்டுப்பாதை" நிகழ்ச்சித்திட்டம் பற்றி திரு. கித்மிண ஹேவகே எழுதிய கட்டுரையிலிருந்து விடயங்களை மேற்கோள்காட்டியிருந்தது. (ஏப்பிறல்)

2019 வரவுசெலவு திட்டம் தொடர்பாக கொள்கை கற்கைகள் நிறுவகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கள் உள்ளாட்டு அச்சு ஊடகங்களில் பிரசுரித்தல் விடயத்தில் " டேலி நியுஸ்" மற்றும் "த அய்லன்ட்" ஆகிய பத்திரிகைகளில் "2019 வரவு செலவு திட்டம் தொடர்பாக கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் கருத்துக்கள் மற்றும் பதிற்செய்பாடுகள்" எனும் கட்டுரை பிரசுரமாகியது. (மார்ச்சு).

"பிரித்தானியா ஐரோப்பா யூனியனிலிருந்து வெளியேறுதல் மற்றும் இலங்கைக்கு அதனால் ஏற்படும் விளைவுகள்" என்பதைப் பற்றி திரு.கித்மிண ஹேவகேவினால் எழுதப்பட்ட கட்டுரை டேலி நிவுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. (ஏப்பிறல்)

கித்மிண ஹேவகே அவர்களினால் வுஏ 1 தொலைக்காட்சி அலைவரிசையில் டீணை 1ளவ நிகழ்ச்சித்திட்டத்தல் பங்கேற்று "நான்காம் கைத்தொழில் புரட்சி மற்றும் இலங்கைக்கு அதனால் விளையும் தாக்கங்கள்" பற்றி கலந்துரையாடினார்.

புலம்பெயர்தல் மற்றும் நகரமயமாக்கல்



கொள்கை கற்கைகள் நிறுவகம் புலம்பெயர்தல் மற்றும் நகரமயமாக்கல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கற்கையின் மூலம் ஊழியர்களுக்கும் அத்துடன் நாட்டிற்கும் அனுகூலமாக அமையும் வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளை இனங்கண்டு மேம்படுத்துதல் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்தல் மற்றும் நகரமயமாக்கலுக்கு திட்டமிடுதல் ஆகிய இரட்டை சவால்கள் ஆராயப்பட்டன.

புலம்பெயர்தல் மற்றும் பணவனுப்பல்கள்



கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் புலம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கல் தொடர்பான ஆராய்ச்சிக் குழு இலங்கையின் பொருளாதாரத்திற்கு அத்தியாவசியமான அம்சமாக கருதப்படுகின்ற புலம்பெயர்தல் துறைக்கு விளித்துரைக்கும் பல்வேறு ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொண்டனர். தொழில்வாய்ப்புகளை தேடி தங்களது வீட்டிலிருந்து வெளியில் செல்வதற்கு தீர்மானிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் எதிர்கால பயணம் தொடர்பாக காணப்படும் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புகள் மற்றும் கரிசனைகள் தொடர்பாக புலனாய்வு செய்யும் பொருட்டு திருமதி. பிலேக்ஷா வீரரத்ன "கற்பனை ரீதியிலான எதிர்காலம்" பற்றிய பண்புசார் ஆய்வொன்றை மேற்கொண்டார். நாடு முழுவதிலுமான ஒப்பீட்டு ரீதியிலான பகுப்பாய்வின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வுக்கு ஊழியர் புலம்பெயர்வு தொடர்பிலான ஆய்வுகள் மற்றும் அனுபவ பகுப்பாய்வுகள் சுநுயுடுஆ இனால் நிதிவசதி வழங்கப்பட்டது.

திருமதி ஹரினி வீரசேகரவுடன் இணைந்து திருமதி. பிலேக்ஷா வீரரத்ன மேற்படி விடயம் தொடர்பிலான பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மேலதிக ஆய்வுகளை மேற்கொண்டனர். "பணவனுப்பல்கள் மூலம் குடும்பத்தில் இந்நாட்டில் தங்கியிருக்கின்ற உறுப்பினர்களின் சேமிப்பு மற்றும் கடன் வாங்கும் நடத்தைகள் மாற்றமடைகின்றதா?" எனும் கற்கையின் மூலம் தொழில்தருநர் மற்றும் முகவர் பிரச்சினைகள் மற்றும் அதனுடன் தொடர்புடையதாக ஏற்படும் புலம்பெயர்தல் மற்றும் இந்நாட்டில் தங்கியுள்ள குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள் புலம்பெயர்தலின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை அடைந்துகொள்வதற்கு தடையாக அமையும் நிலையில் புலம்பெயர்ந்தவரின் இந்நாட்டில் தங்கியுள்ள குடும்ப அங்கத்தவர்களின் சேமிப்பு மற்றும் கடன் வாங்கும் நடத்தைகள் மீது புலம்பெயர்வினால் ஏற்படும் தவறான தாக்கத்தை புலனாய்வு செய்தனர். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் இந்த கற்கைக்கு நிதிவசதி அளிக்கப்பட்டது.

பணவனுப்பலுக்கான கிரயத்தை குறைத்துக்கொள்வதற்கான முறைகளை இனங்காண்பதற்கு தீர்மானம் மேற்கொள்பவர்களுக்கு உதவி வழங்கும் பொருட்டு "புலம்யெர் ஊழியர்களின் பணவனுப்பல் செலவினை குறைக்கும் நோக்கத்துடன் பணவனுப்பல் முறைகள்" தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கற்றலுக்கு உலக தொழிலாளர் அமைப்பினால் நிதி வசதியளிக்கப்பட்டது.

ஆட்சேர்ப்பு செய்யும் பிரதிநிதிகளினால் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு மேற்கொள்ளப்படும் செலவினங்களும் உள்ளிட்டவாறு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக கவனத்திற்கொள்ளும் "ஆட்சேர்பு தொழில்முயற்சி செயன்முறை" பற்றிய ஆய்வொன்றிற்கு உலக தொழிலாளர் அமைப்பினால் நிதி வசதியளிக்கப்பட்டது. ஜக்கிய நாடுகளின் பல்கலைக்கழகம் – அபிவிருத்தி பொருளியல் ஆராய்ச்சிக்கான உலக நிறுவனம். (ருருே – றுஜனுநுசு) குடும்ப பின்னணி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான தேவையை அறிமுகப்படுத்துதல், பல்வேறு பயற்சி வகுதிகளைச் சார்ந்த பெண்களுக்கு பால்நிலை ஒரு தடையாக எவ்வாறு தொழிற்படுகின்றது மற்றும் வருமானத்தை ஈட்டும் சுமையை ஏற்கும் போது ஆண்கள் மற்றும் பெண்களை பதிலீடு செய்தல் மீது குடும்ப பின்னணி அறிக்கையின் மூலம் விளையக்கூடிய தாக்கம் பற்றி புலனாய்பு செய்தல் இதன் நோக்கமாக அமைந்தது.

நகரமயமாக்கல்

நகரமயமாக்கல் தொடர்பிலான பிரச்சினைகளை விளித்துரைத்து திருமதி பிலேக்ஷா வீரரத்ன அவர்கள் "துணை தேசிய மட்டத்தில் நிதியளித்தல் மற்றும் பிரதேச ரீதியிலான சேவைகளை பகிர்ந்தளித்தல்: இலங்கையில் திண்மக் கழிவுகனை முகாமைத்துவம் செய்யும் நிலை" எனும் தலைப்பின் கீழ் எழுதப்பட்ட ஆராய்ச்சி கட்டுரையொன்று "தெற்காசிய துணை தேசிய மட்டத்தில் பிரதேச ரீதியில் சேவைகளை பகிர்ந்தளித்தல் பற்றிய நான்காம் தெற்காசிய பொருளாதார வலையமைப்பு மாநாடு" எனும் நிகழ்வின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் டாக்கா நகரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித்திடத்திற்கு பொருளியல் மாதிரியமைத்தலுக்கான தெற்காசிய வலையமைப்பினால் அனுசரணை வழங்கப்பட்டது (செப்டெம்பர்)

வெளியீடுகள்

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் முதன்மை வெளியீடாகிய "இலங்கை: பொருளாராத நிலை 2019" வெளியீட்டிற்கு திருமதி. பிலேக்ஷா வீரரத்ன "புலம்பெயர்தல் மற்றும் பணவனுப்பல்கள்: இலங்கையில் தங்குகின்ற குடும்ப அங்கத்தவர்களின் நிதி நடத்தையின் மீது ஏற்படுத்தும் தாக்கம்" (கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சி இதழ் இலக்கம் 201, யூலை) மற்றும் "நான்காம் கைத்தொழில் புரட்சியில் புலம்பெயர்தல் மற்றும் சர்வதேச பிரயாணங்கள்" எனும் தலைப்பில் ஆக்கமொன்றை வரைந்தார். திரு. ஜனக விஜயசிறி சர்வதேச பொருளாதார கொள்கை தொடர்பாக கொரிய நிறுவனத்தின் ஆராய்ச்சி அங்கத்துவத்தை வகிக்கும் காலகட்டத்தில் அந்நிறுவனத்திற்கு "தெற்காசியாவில் குறைந்த பயிற்சியுடைய புலம்பெயர் ஊழியர்களின் கிரயம்: இலங்கையின் நிலை" எனும் தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை வரைந்தார்.

மோதலுக்கு பின்னரான சூழமைவில் அபிவிருத்தியின் போது உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்கள் மற்றும் வாய்ப்புகளை முகாமைத்துவம் செய்து கொள்ளுதல்: இலங்கையிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள், எனும் தலைப்பில் துஷ்னிவீரகோன் மற்றும் சிசிற ஜயசூரியவினால் தொகுக்கப்பட்ட தொகுதிக்கு நகரமயமாக்கலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை வலியுறுத்தி "நடுத்தர வருமானம் மற்றும் அதற்கு மேல் மட்டம் எனும் நிலைக்கு உயர்த்தப்படுதல்: மோதலுக்கு பின்னராக இலங்கையில் நகரமயமாக்கல் சவால்கள் எனும் தலைப்பில் அத்தியாயமொன்றும் சுமான பண்ட்யோப்தாய உள்ளிட்ட குழுவினால் தொகுக்கப்பட்ட சமூக பொருளாதார உந்துதல்கள், சூழல்சார் தாக்கம் மற்றும் கொள்கை பதிற்செய்பாடுகள் எனும் தலைப்பின் கீழ் தெற்காசிய நகரமயமாக்கல் மற்றும் பிராந்தி நிலைபேறான தன்மை, 1 ஆம் பதிப்பு, 2020 பதிப்பு, சிங்கப்பூர், ஸ்பிரின்ஞர் எனும் தொகுதிக்கு "இலங்கையில் நகர்புற வீடமைப்புகள்" எனும் அத்தியாயமொன்றும் திருமதி பிலேக்ஷா வீரரத்னவினால் எழுதப்பட்டது.

கொள்கை சார்ந்த விடயங்களில் ஈடுபடுதல்

குழுக்கள்

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சினால் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சினால் கூட்டப்பட்ட ஊழியர் புலம்பெயர்வு பற்றிய தேசிய ஆலோசனைக் குழுவிற்கு திருமதி பிலேக்ஷா வீரரத்ன கொள்கைசார் உள்ளீடுகளை வழங்கினார். மேலும், அவர் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் இடைத்தரகர்களை ஒழுங்குபடுத்துவதற்கான நடைமுறைகளின் வரைவினை தயாரிப்பதற்கான செயலணியின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.

மேலும், திருமதி பிலேக்ஷா வீரரத்ன மற்றும் திருமதி நிக்ஷா அருணதிலக ஆகியோர் உலக தொழிலாளர் அமைப்பினால் ஒழுங்செய்யப்பட்ட திருத்தப்பட்டவாறான தேசிய ஊழியர் புலம்பெயர்வு கொள்கையினை உருவாக்குவதற்கான நிபுணர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினர்.

சமர்ப்பணம் மற்றும் கலந்துரையாடல் குழுக்கள்

புலம்பெயர்வு மற்றும் பணவனுப்பல்கள் தொடர்பிலான பல்வேறு பிரச்சினைகள் கலந்துரையாடப்படுகின்ற ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்படுகின்ற விடயங்களை பிரச்சாரம் செய்து கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் பின்வரும் நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

- கொழும்பில் அமைந்துள்ள உலக தொழிலாளர் அமைப்பில் நடைபெற்ற "ஆட்சேர்ப்பின் இடைத்தரகர்களை ஒழுங்குபடுத்துதல்" பற்றிய கலந்துரையாடலில் திருமதி பிலேக்ஷா வீரரத்ன "இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில்துறையில் ஆட்சேர்ப்பில் ஈடுபடும் இடைத்தரகர்கள்" எனும் தலைப்பில் சமர்ப்பணமொன்றை முன்வைத்தார். (பெப்ரவரி)
- மூன்றாவது வருடாந்த "ஊழியர் புலம்பெயர்வு பற்றிய ஆராய்ச்சிகள் மற்றும் அனுபவ பகுப்பாய்வு செயலமர்வு" நடைபெற்றபோது திருமதி.பிலேக்ஷா வீரரத்ன "தற்காலிக புலம்பெயர்வு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் இலங்கையின் துணை பிரதிநிதிகளின் வளர்ந்துவரும் வகிபாகம்" பற்றிய சமர்ப்பணமொன்றை முன்வைத்தார். இச் செயலமர்வு அபுதாபியில் அமைந்துள்ள புதிய நியுயோர்க் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. (மார்ச்சு)
- "பாதுகாப்பான, ஒழுங்குமுறையான மற்றும் கிரமமான புலம்பெயர்வுக்காக பால்நிலை பதிற்செயற்பாடு சார்ந்த உலகளாவிய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய ஆலோசனை நிகழ்ச்சித்திடம்" எனும் செயலமர்வில் "இலங்கையில் புலம்பெயர்வு மற்றும் பால்நிலை: புலம்பெயர்வுக்கான உலகளாவிய ஒப்பந்தத்திற்கான போக்குகள் மற்றும் வாய்ப்புகள்" எனும் தொனிப்பொருளில் திருமதி பிலேக்ஷா வீரரத்ன சமர்ப்பணமொன்றை முன்வைத்தார். ஜக்கிய நாடுகள் அமைப்பினால் கொழும்பில் இந்நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது (மார்ச்சு).
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (யூன்) மற்றும் உலக தொழிலாளர் அமைப்பு (யூலை) ஒன்றிணைந்த ஏற்பாடு செய்த மாநாட்டில் திருமதி பிலேக்ஷா வீரரத்ன "பனவணுப்பல்கள்" பற்றிய சமர்ப்பணமொன்றை முன்வைத்தார்.
- கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டு அனுசரணை வழங்கப்பட்ட "ஓஜஜ ஆவது தெற்காசிய பொருளாதார மாநாடு" நடைபெற்ற போது திருமதி பிலேக்ஷா வீரரத்ன "நான்காம் கைத்தொழில் புரட்சியில் ஊழியர் புலம்பெயர்வினை முகாமைத்துவம் செய்தல்" எனும் தலைப்பில் சமர்ப்பணமொன்றை முன்வைத்தால். (செப்டெம்பர்).



- தென்கொரியாவில் குறைந்த பயிற்சி பெற்ற ஊழியர்களின் கிரயம்: இலங்கையின் நிலை" எனும் விடயம் தென் கொரியாவில் சர்வதேச பொருளாதார கொள்கைக்கான கொரிய நிறுவகத்தின் "வெளிவாரியான கல்விமான்களின் கருத்தரங்கில்" திரு.ஜனக விஜயசிறி அவர்களினால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணத்தின் தலைப்பாக இருந்தது. (அக்டோபர்)
- திரு. ருவண் சமரவீர இலங்கையின் கிழக்கு பல்கலைக்கழகத்தில் "புலம்பெயர்வு, பனவணுப்பல்கள் மற்றும் வறுமை: இலங்கையில் கிராமிய துறையின் மூலம் கிடைக்கும் ஆதராங்கள்" எனும் விடயம் தொர்பான ஆராய்ச்சி பத்திரமொன்றை சமர்ப்பித்தார்.(நவம்பர்)
- திருமதி பிலேக்ஷா வீரரத்ன "2019 உலகளாவிய மனிதாபிமான கொள்கை மன்றத்தின்" கலந்துரையாடல் குழுவில் வளப்பகிர்வு அங்கத்தவராக பணியாற்றினார். ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான பணிகளை ஒருங்கிணைப்பதற்கான அலுவலகம் (ருழேஊஉய) மற்றும் ஐக்கிய நாடுகளின் மன்றத்தினால் ஐக்கிய அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் இந்நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது (டிசெம்பர்)
- திரு. அத்துல சேனாரத்ன "எல்லைகளை கடந்து செல்லுதல்: இடர்வரு நிலை பற்றிய கூருணர்வுமிக்க நகர அபிவிருத்தி" எனும் செயலமர்வில் நகரமயமாக்கல் பற்றி "இடர்வரு நிலை பற்றிய கூருணர்வுமிக்க நகர அபிவிருத்தி" எனும் அமர்வில் கலந்துரையாடல் குழுவில் வளப்பகிர்வு உறுப்பினராக செயலாற்றினார். கொழும்பில் நடைபெற்ற இந் நிகழ்ச்சித்திட்டம் ஐக்கிய நாடுகளின் செல்பர்ட் பல்கலைக்கழகம், மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் மவுன்ட் லெவினியா ஹோட்டல் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (டிசெம்பர்)

வலைப்பதிவு

திருமதி பிலேக்ஷா வீரரத்ன "தீர்மானகரமான மாற்றமொன்றை ஏற்படுத்துதல்: இலங்கைக்கு ஊழியர்களிடமிருந்து கிடைக்கின்ற பணவனுப்பல்கள் நாங்கள் நினைக்கும் அளிவிற்கு பெரியதா" (பெப்ரவரி) "மர்மம் மறைந்துள்ளது: இலங்கையின் பணவனுப்பல்கள் பற்றி மிகவும் கூர்மையாக ஆராய்தல்" (யூலை), மற்றும் "இலங்கைக்கு கிடைக்கும் பணவனுப்பல்களின் பால்நிலை பரிமாணம்: அதிகமாக அனுப்புவது யார்? (டிசெம்பர்) போன்ற விடயங்கள் உள்ளிட்ட புலம்பெயர்தலுக்கு ஏதுவான பல்வேறு துறைகள் தொடர்பாக டோக்கிங் இகோனமிக்ஸ் சஞ்சிகைக்கு வலைப்பதிவு கட்டுரைகள் எழுதினார். திரு. ஜனக விஜயசிறி "மீதப்படுத்திய பணம் ஈட்டிக்கொண்ட பணமாகும்" எனும் வலைப்பதிவு ஆக்கத்தை எழுதினார் (அக்டோபர்)

திருமதி. பிலேக்ஷா வீரரத்ன "புலம்பெயர்வு மற்றும் பயங்கரவாதத்திற்கு இடையில் காணப்படும் தீங்குமிக்க உறவு: இலங்கையின் தேச எல்லைகளை கட்டுப்படுத்துவதில் எழும் விளைவுகள்" (ஏப்பிறல்), மற்றும் "சுற்றுலாத் துறை மற்றும் பணவனுப்பல்கள்: இலங்கை அந்நியச் செலாவணியை ஈட்டுதல் மீது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஏற்படுத்தும் தாக்கம்" (மே) எனும் ஆக்கத்தை எழுதியதுடன் ஆசியாவின் கலந்துலையாடல் எனும் வலைப்பதிவுக்கு "ரோபோவினால் பதிலீடுசெய்யப்படுமா? புலமையின் யுகத்தில் இலங்கையில் நிகழும் புலம்பெயர்வு" எனும் கட்டுரையை எழுதினார்.

மேலும், திருமதி. நிமேக்ஷா திசாநாயக்க ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்

ருனேஸ் ருடேழுஊமுநுனு இடைவெளிக்கு “நகர கொள்கை மற்றும் திட்டமிடலின் போது நீர் நிர்வாகம்” எனும் தலைப்பில் கட்டுரையொன்றை வரைந்தார். (யூலை)
டோக்கிங் இகோனமிக்ஸ் வலைப்பதிவுக்கு எழுதப்பட்ட அனைத்து ஆக்கங்களும் பிரதான பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்களில் பிரசுரமாகியது.

ஊடகம்

திருமதி பிலேஷா வீரரத்ன வுஏ 1 தொலைக்காட்சி அலைவரிசையின் ஒளிபரப்பப்பட்ட டீணை 1ளவ ரை குழஉ டீ எனும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு “இலங்கையின் ஊழியர் புலம்பெயர்வின் போக்கினைப் பற்றி கலுந்துரையாடுதல்” எனும் தொலைக்காட்சி கலந்துரையாடலில் பங்கேற்றார். (யூலை)







சுகாதாரம், கல்வி மற்றும் ஊழியம்

கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் “நிலைபேறான அபிவிருத்திக்கு மனித வளங்கள்” பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் தொழில்நுட்பத்தினால் தொடர்ச்சியாக சீரமைக்கப்பட்டுவரும் உலகமயமாக்கப்பட்டுள்ள பொருளாதாரமொன்றில் மாற்றமடைந்து வரும் கேள்வியினை ஈடுசெய்யும் பொருட்டு இலங்கையின் மனித வளங்களை வலுவூட்டுவதற்கு தாக்கம் விளைவிக்கும் தடைகள் கலந்துரையாடப்படுகின்றது. உயர் நிலையிலுள்ள மூன்றாம் நிலைக்கல்விக்கு காணப்படும் வாய்ப்புகளை மேம்படுத்துதல், பொதுக் கல்வியின் தரம் மற்றும் அதற்கான வாய்ப்புகளில் காணப்படும் குறைபாடுளை பூர்த்திசெய்தல், மற்றும் போசாக்கு அத்துடன் தொற்றா நோய்கள் பரவுதல் போன்ற சுகாதார பிரச்சினைகளை தீர்த்தல் கல்வியின் வெற்றிக்காகவும் வேலை உலகத்தின் பயனுறுதியினை உறுதிப்படுத்துவதற்கும் முக்கியமானதாகும். பயனுறுதி மற்றும் ஊழியர் படையின் பங்கேற்பு விகிதம் விருத்தியடைதல் ஆகியவற்றிற்கு தேவைப்படும் குறைந்து வரும் வேலை செய்யும் வயதிலுள்ள குடித்தொகை அத்துடன் அதிகரித்து வரும் முதிர்வயதிலுள்ள குடித்தொகை ஆகியவற்றின் ஊடாக வெளிப்படுகின்ற குடிவிபரவியல் வாயிலாக ஊழியச் சந்தைத் துறையில் காணப்படும் சவால்கள் மேலும் சிக்கல்மிக்கதாகியுள்ளது. சுகாதாரம், கல்வி போன்ற துறைகள் பற்றி ஆராய்ச்சிக் குழு மனித வளங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தொடர்பான பல்வேறு ஆராய்ச்சி வீச்சுகளில் ஈடுபட்டது.



திறன்கள் மற்றும் கல்வி

இலங்கையில் 5 ஆம் தரத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொளும் வீதம் கீழ் மட்டத்தில் இருப்பதற்கான காரணம் அப்பரீட்சையின் உள்ளடக்கம் மற்றும் ஏற்புடையத்தன்மை பற்றி அண்மைக்காலத்தில் அப்பரீட்சைக்கு தோற்றியவர்கள் மத்தியில் உள்ள புரிதல் பற்றி ஆராய்வதற்காக திருமதி.அக்ஷானி அபயசேகர "இலங்கையில் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை: செயலாற்றுகை மற்றும் பயனுறுதியை மதிப்பீடு செய்தல்" எனும் தலைப்பின் கீழ் ஆய்வொன்றை மேற்கொண்டார். இலங்கையில் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் பயனுறுதி மற்றும் ஏற்புடையத் தன்மையினை மேம்படுத்துவதற்கு பின்பற்றப்பட வேண்டிய பல நடவடிக்கைகள் இந்த ஆய்வின் மூலம் முன்மொழியப்பட்டது. இதன் மூலம் கண்டறியப்பட்ட பிரதான விடயங்கள் மற்றும் கொள்கை விதப்புரைகள் ஆகியவற்றை சுறுக்கமாக எடுத்துரைக்கும் கொள்கை சுறுக்கமொன்றுடன் இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்கள் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டது. கொள்கை கற்கைகள் நிறுவகம் இந்த ஆய்வுக்கு நிதிவசதியினை வழங்கியது.

சுகாதாரம்

திருமதி பிரியங்கா ஜயவர்தன மற்றும் திருமதி சதுர்கா கருணாநாயக்க ஆகியோர் "கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர் சுகாதாரம் அத்துடன் போசாக்கு தொடர்பிலான அடிப்படை மதிப்பீடு" எனும் தலைப்பின் கீழ் ஆய்வொன்றை மேற்கொண்டனர். பெருந்தோட்ட சமுதாயத்தின் சுகாதார மற்றும் போசாக்கு பழக்கங்களை திட்டவட்டமாக அறிந்துகொள்ளுதல், தற்போதைய கொள்கைகள் மற்றும் நிலவும் சுகாதார மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகளை பயன்படுத்திக்கொள்ளுதல், அத்துடன் குறைபாடுகளை பூர்த்திசெய்தல் மற்றும் தரத்தை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கு காணப்படும் நுழைவு வழிமுறைகளை இனங்காணுதல் போன்ற மூன்று துறைகளின் இடையீடுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர் சுகாதார சேவைகளின் தரத்தையும் அச்சேவைகளை அடைந்துகொள்வதற்கான வாய்ப்பினையும் முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்விற்கு சேவ் த சில்ரன் ஸ்ரீ லங்கா நிறுவனத்தினால் நிதிவசதியளிக்கப்பட்டது.

திருமதி பிரியங்கா ஜயவர்தன உலக வங்கியுடன் இணைந்து "இலங்கையில் போசாக்கிற்கான அரச செலவினத்தின் மீளாய்வு: போசாக்கிற்காக அரச நிதியினை ஈடுபடுத்துதல் பற்றிய மதிப்பீடு (2014 - 2018)" எனும் தலைப்பின் கீழும் ஆய்வொன்றை மேற்கொண்டார். நாட்டின் ஒட்டுமொத்த செலவின மட்டத்துடன் ஒப்பிடுகையில் போசாக்குக்காக மேற்கொள்ளப்படுகின்ற அரச செலவினங்களை இனங்கண்டுகொள்வதின் அடிப்படை நோக்கத்தைக் கொண்டதாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் மூலம் இலங்கையில் போசாக்கிற்காக உறப்படுகின்ற அரச செலவினங்கள் ஆராயப்பட்டன. சிறுவர் போசாக்கினை மேம்படுத்துவதற்கான கொள்கைகளின் முக்கியத்துவத்தை இனங்கண்ட இந்த அறிக்கை சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் உலக வங்கிக்கு கையளிக்கப்பட்டதுடன் சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அந்நிகழ்வு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் (யுனிசெப்) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும், திருமதி பிரியங்கா ஜயவர்தன கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் நிதியளிப்பின் கீழ் "இலங்கையில் மந்தபோசணை: விடிாப்பிடியான பிர்ச்சினை" எனும் தலைப்பின் கீழ் ஆய்வொன்றை மேற்கொண்டார். 2006 - 2016 கால கட்டத்தில் சிறுவர் மந்தபோசணை சிறந்த நிலைக்கு மாற்றமடைவதற்கான காரணம் என்னவெனும் விடயம் இந்த ஆய்வின் மூலம் ஆராயப்படுவதுடன் மந்தபோசணையின் சந்ததிவழி வட்டம் மற்றும் உணவுத் திட்டத்தின் உணவுகள் மற்றும் அறிவு இடைவெளிகளும் இலங்கையில் கணிசனமானளவு மட்டத்தில் காணப்படுகின்றதென இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் இலங்கையின் ஒட்டுமொத்த கொள்கை ஒழுங்குபத்திரத்தில் முக்கியமானதொரு அம்சமாக புகையிலை பாவணையை கட்டுப்படுத்துதல் தொடர்பான ஆராய்ச்சிகளில் கட்புலன் வடிவத்தை அதிகரித்தல் மற்றும் புகையிலை பாவணையை கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதை அதிகரித்தல் கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். அவ்வாறு செய்வதின் ஊடாக இலங்கையில் காணப்படும் புகைத்தலை 10 வீதத்தை விட குறைவான மட்டம் வரை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. புகையிலை பாவனை தொடர்பாக திருமதி நிக்ஷா அருணதிலக மேற்கொண்ட ஆராய்ச்சி தொடருக்கு ஐக்கிய இராய்ச்சியத்தின் கென்சர் ரிசர்ச் முஜஏரு இன்டர்நெக்ஷனல் எனும் நிறுவகத்தினால் நிதிவசதி அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புகையிலை பாவனையை தற்போத பெருமளவு குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன் "புகையிலை பாவணையை கட்டுப்படுத்துதல்: இறுதி கட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்" எனும் கற்கையின் மூலம் புகையிலை பாவணையை

கட்டுப்படுத்துவதற்கான கொள்கைக்காக ஆதரவளிப்பதன் ஊடாக இந்நாட்டில் புகையிலை பாவணை சார்ந்ததாக இடம்பெறுகின்ற பாதக நிலைமைகள குறைத்தல் நோக்காகக் கொள்ளப்பட்டது. புகையிலை பாவனைக்கு ஏதுவாக இலங்கையின் தற்போதைய நிலவரம் மற்றும் இலங்கையிலுள்ள புகையிலை பாவணையாளர்களில் இறுதி கட்டத்திலுள்ள புகைப்பவர்களில் புகைத்தலை நிறுத்திவிடும் பொருட்டு இந்நாட்டிற்கான கொள்கை மாற்றுவழிகளை ஆராயும் நோக்கில் திருமதி சுனிமாலி மதுராவல மற்றும் திருமதி சதுர்கா கருணாநாயக்க ஆகியோரினால் "புகையிலை பாவணையை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்: நிறுத்தி விடுவதற்கான கொள்கை" எனும் தலைப்பில் ஆய்வொன்றை மேற்கொண்டனர் "நெருங்குவதற்கு சிரமமான குழுக்களை" புரிந்துகொள்ளுதல் முக்கியமானதாக இருப்பதாகவும் அது இலங்கையில் இறுதி கட்டத்திலுள்ள புகைப்பவர்கள் மத்தியில் புகைத்தல் பழக்கத்தை குறைப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டிய துறையாக கருதப்பட வேண்டுமெனவும் இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது.

சுனிமாலி மதுராவல, சதுர்கா கருணாநாயக்க மற்றும் சாமினி திலங்கா ஆகியோர் "புகையிலை பாவணையை கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்: கொள்கை பிர்ச்சினைகளை புரிந்துகொள்ளுதல்: இறுதி கட்டத்தில் இருப்பவர்கள் யார்? எனும் தலைப்பின் கீழ் மற்றுமொரு கற்கையினை மேற்கொண்டதுடன் இலங்கையில் தற்போதுள்ள புகைப்பவர்களின் எண்ணிக்கையை இனங்காணுதல் மற்றும் அவர்கள் இற்றைவரை ஏன் புகைப்பிடிக்கின்றார்கள் மற்றும் மிகவும் பொருத்தமான கொள்கை பதிலிறுப்பின் மீது இதனால் விளையும் தாக்கங்கள் யாவை என்பதைப் பற்றி புரிந்தகொள்ளுதல் இந்த ஆய்வில் உள்ளடங்கியிருந்தது.

திருமதி நிக்ஷா அருணதிலக, ஹரிணி வீரசேகர மற்றும் சாமினி திலங்கா ஆகியோர் "புகையிலை பாவணையை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்: வரி நெகிச்சியினை கணிப்பீடு செய்தல் மற்றும் புகையிலை வரி திருத்தத்தின் வாயிலாக வரி வருமானம் மீது ஏற்படும் தாக்கங்களை மதிப்பீடு செய்தல்" எனும் தலைப்பின் கீழ் கற்கையொன்றை மேற்கொண்டனர். இந்த ஆய்வின் மூலம் ஏற்கனவே காணப்படும் புகைத்தலை குறைப்பதற்கும் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கும் இலங்கையில் தற்போது காணப்படும் புகையிலை மீதான வரிகளின் பயனுறுதித்தன்மை பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது. புகைத்தல் பொருட்கள் மீதான வரி கட்டமைப்பு எளிமையாக்கப்பட வேண்டமென்றும் புகைத்தல் பொருட்களுக்கு செலவிடுவதற்கான ஆற்றலை குறைப்பதற்கும் பணவீக்கத்திற்கு வீதப்படியாக அவ்வரி விகிதங்கள அதிகரிக்க வேண்டுமெனவும் இக்கற்கையின் வாயிலாக விதப்புரை செய்யப்பட்டது.

2019 சனாதிபதி தேர்தல் அண்மித்திருந்தபோது கொள்கை கற்கைகள் நிறுவகம் புகையிலை பாவணையை கட்டுப்படுத்துதல் தொடர்பான கொள்கைகள் பற்றி அண்மைக்காலத்தில் இந்நிறுவகத்தினால் செய்யப்படுகின்ற ஆராய்ச்சிகள் தொடர்பான தகவல்களை புகையிலை பாவணையை கட்டுப்படுத்துவதற்காக செயற்படும் குழுக்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் மத்தியில் பகிர்வதற்கு புகையிலை பாவணையை கட்டுப்படுத்தும் கொள்கையினை வலுவூட்டுதல் தொடர்பிலான செயலமர்வொன்றை நடாத்தியது. புகையிலை பாவணையை கட்டுப்படுத்துதல் தொடர்பாக வலுவான கொள்கைகள் இருப்பதன் தேவை, புகையிலை பாவணையை மேம்படுத்தும் முறைசாராத முறைகைள தடுத்துநிறுத்துதல், புகையிலை சார்ந்த தொழில்முயற்சிகள் மூலமாக பரப்பப்படும் தவறான தகவல்களை முறைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல், புகையிலை வரி மற்றும் கொள்கைகள், மற்றும் புகையிலை பாவணையின் சுகாதார மற்றும் சமூக கிரயங்கள் போன்ற பிரச்சினைகள் இந்த செயலமர்வின் போது வலியுறுத்தப்பட்டது. மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள் பற்றிய தகவல் நிலையம் மற்றும் புகையிலை பாவணைக்கு எதிராக போராடுவதற்கான நிலையம் ஆகியவை இந்த செயலமர்வின் பங்கீடுபாட்டாளர்களாக செயற்பட்டனர். 2019 மே மாதம் 31 ஆம் திகதி கொண்டாடப்பட்ட "உலக புகைத்தல் பொருட்களுக்கு எதிரான தினம்" இத்தினத்தை கொண்டாடுவதற்கும் விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கும் கொள்கை கற்கைகள் நிறுவகம் ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களை காட்சிப்படுத்தும் சுவரொட்டித் தொடரொன்றுடன் கூடிய சமூக ஊடக இயக்கமொன்றை நடாத்தியது. தனித்தனியான ஆராய்ச்சிக் குழுக்களும் ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களை பகிர்ந்துகொள்வதற்காக கலந்துரையாடல்களை நடாத்தி முக்கியமான பங்கீடுபாட்டாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் வலைப்பின்னல்களை ஏற்படுத்திக்கொண்டனர்.

பெண்கள் மற்றும் ஊழியர் படை

"இரவு வேளைகளில் பணியாற்றும் பெண்கள்" பற்றி நடாத்தப்பட்ட ஒன்றணைந்த கற்கைக்கு கொள்கை கற்கைகள் நிறுவகம் மற்றும் ஜக்கிய இராச்சியத்தின் வோர்விக் பல்கலைக்கழகம் ஆகியவற்றினால் நிதி வசதியளிக்கப்பட்டது. நிக்ஷா அருணதிலக, அக்ஷானி அபயசேகர, சதுர்கா கருணாநாயக்க மற்றும் துலினி பர்னாந்து ஆகியோர் வோர்விக் பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப் படுத்தி இந்த ஆய்வினை மேற்கொண்டனர். நிறுவனங்களில் இரவு

வேளையில் பணியாற்றுதல் தொடர்பான விதிகள், கொள்கைகள், மற்றும் வழக்கங்கள் ஆகியவற்றிற்கிடையில் தற்போது காணப்படும் இடைவெளிகளை விளித்துரைப்பதற்கு இந்த கற்கைகள் நோக்கம் கொண்டதாக அமைந்தன. மேலும், பாதுகாப்பான மற்றும் பயனுறுதிமிக்க தொழில்களுக்கு காணப்படும் வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில் இக்கற்கை ஊடாக பெண்கள் சவால்களுக்கு காட்டும் பதிற்செயற்பாடு, அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளின் விளைவுகள் மற்றும் இலங்கையில் சுகாதார மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற துறைகளில் இரவு வேளைகளில் பணியாற்றும் பெண்கள் பற்றி தொழில்தருநர்களின் புரிந்துணர்வு பற்றி கவனம் செலுத்தப்பட்டது. இக்கற்கை மூலமாக வெளிக்கொணரப்பட்ட விடயங்கள் உள்ளிட்ட வெள்ளை அறிக்கையொன்று தொழில் ஆணையாளர் நாயகம் திரு.ஆர். பீ.ஏ விமலவீர அவர்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டது.

வெளியீடுகள்

கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கு அமைவாக திருமதி.அக்ஷானி அபயசேகர "இலங்கையில் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை: பயனுறுதி மற்றும் ஏற்புடையத்தன்மையை மதிப்பீடு செய்தல்" எனும் கற்கையின் (சனவரி) மூலம் கண்டறியப்பட்ட விடயங்களை வலியுறுத்தி கொள்கை சுருக்கமொன்றை தயாரித்தார். திருமதி அக்ஷானி அபயசேகர மற்றும் திருமதி நெலூகா குணசேகர ஆகியோர் இணை ஆசிரியர் பதவி வகித்து "இலங்கையில் கல்வியில், தொழிலில் அல்லது பயிற்சியில் ஈடுபட்டிருக்காத இளைஞர் யுவதிகள் (நேநுவுள): கல்வியில், தொழிலில் அல்லது பயிற்சிகளில் ஈடுபட்டிருக்காத இளைஞர் யுவதிகள் பற்றிய பகுப்பாய்வு" எனும் கட்டுரையை (கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஊழியம் மற்றும் புலம்பெயர்தல் பற்றி ஆராய்ச்சி நூல்தொடர் இலக்கம் 200,மார்ச்சு) எழுதியதுடன் அதன் மூலம் கல்வியில்,தொழிலில் அல்லது பயிற்சியில் ஈடுபட்டிருக்காத குழுக்களின் வகுதிக்கு தள்ளப்படுதல் மற்றும் கல்வி அல்லது பயிற்சியில் ஈடுபடாத விசேட துணைக் குழுக்கு உள்ளாவதில் இருக்கக்கூடிய இடர்வருநிலை சார்ந்த காரணிகள் இனங்காணப்பட்டன. அக்ஷானி அபயசேகர மற்றும் நெலூகா குணசேகர இணைஆசிரியர்களாக பணியாற்றி "அபிவிருத்தி சார்ந்த பொருளியல் மீளாய்வு" எனும் வெளியீட்டில் "கல்வி, தொழில் அல்லது பயிற்சிகளில் ஈடுபடாத இளைஞர் யுவதிகள் பற்றிய அளவுகோல்கள்: இலங்கையிலிருந்து கிடைக்கக்கூடிய ஆதாரங்கள்" எனும் அத்தியாயத்தை எழுதினர். மேலும், "இலங்கை: பொருளாதார நிலை 2019" வெளியீட்டில் திருமதி அக்ஷானி அபயசேகர "இலங்கையின் கல்வித் துறை: நான்காம் கைத்தொழில் புரட்சியில் மீண்டும் திறன்களை கட்டியெழுப்புதல்" பற்றயி அத்தியாயமொன்றை எழுதினார்.

பிரியங்கா ஜயவர்தன அவர்கள் சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளை வலியுறுத்தும் "இலங்கையில் போசணைக்காக அரசு மேற்கொள்ளும் செலவினங்கள் பற்றிய மீளாய்வு: போசணைக்கு அரச நிதியளிப்பினை மதிப்பீடுசெய்தல் (2014 - 2018)" எனும் உலக வங்கி வெளியீட்டில் இணை ஆசிரியராக பணியாற்றியதுடன் "இலங்கை: பொருளாதர நிலை 2019" வெளியீட்டில் "நான்காம் கைத்தொழில் புரட்சியில் சுகாதார பராமரிப்பு" எனும் அத்தியாயத்தை எழுதினார்.

புகையிலை பாவணையை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருமதி. சுனிமலி மதுராவல "இறுதி கட்டத்தினை இனங்காணுதல்: இற்றைவரை புகைப்பிடிப்பது யார்? எனும் கொள்கை சுருக்கத்தை எழுதியதுடன் இக்கற்கைக்கு முஜஏரு இன்டர்நெக்ஷனல் மற்றும் ஐக்கிய நாடுகளின் கென்சர் ரிசர்ச் எனும் அமைப்பினால் நிதிவசதி வழங்கப்பட்டது.

திருமதி.துக்ஷ்னி வீரகோன் மற்றும் திரு.சிசிர ஜயசூரிய ஆகியோரினால் திருத்தியமைக்கப்பட்ட வெளியீடாகிய மோதலுக்கு பின்னரான சூழமைவில் அபிவிருத்தியின் உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்கள் மற்றும் வாய்ப்புகளை முகாமைத்துவம் செய்தல் - இலங்கையிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள், ஸ்பிரின்ஜர், சிங்கப்பூர் இற்கு திருமதி நிக்ஷா அருணதிலக "மிகவும் சிறந்த தொழில்வாய்ப்புகள் ஊடாக மிகவும் சிறந்த பொருளாதார மாற்றம்" எனும் தலைப்பின் கீழ் அத்தியாயமொன்றை எழுதினார். கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் மிகவும் முதன்மையான வெளியீடாகிய "இலங்கை : பொருளாதார நிலை 2019" எனும் வெளியீட்டில் தனது பங்களிப்பினை வழங்கி திருமதி நிக்ஷா அருணதிலக "நான்காம் கைத்தொழில் புரட்சி மற்றும் இலங்கை தொழில்களின் எதிர்காலம்" பற்றி அத்தியாயமொன்றையும் திருமதி சுனிமாலி மதுராவல "நான்காம் பொருளாதார புரட்சி: பால்நிலைக்கு சவாலா அல்லது சந்தர்ப்பமா" எனும் அத்தியாயத்தையும் திருமதி நிபுணி பெரேரா "நான்காம் கைத்தொழில் புரட்சி மற்றும் ஊழியர் படையில் உள்ள பெண்கள்: இலங்கையில் ஆடை ஏற்றுமதிக் கைத்தொழில்" எனும் தலைப்பின் கீழ் கொள்கை சுருக்கமொன்றை எழுதினார்.

கொள்கை சார் விடயங்களில் ஈடுபடுதல்

குழுக்கள்

தேசிய கல்வி ஆணைக்குழுவின் உயர் கல்வி பற்றிய நிலையியல் குழு, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் ஆராய்ச்சி மேற்பார்வைக் குழு மற்றும்

குடித்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் வடிவத்தை மாற்றியமைத்தல் பற்றிய ஆலோசனைக் குழுக் கூட்டம் போன்றவற்றில் ஈடுபடுதல் உள்ளிட்ட கொள்கை குழுத் தொடரின் ஊடாக திருமதி நிக்ஷா அருணதிலக ஆராய்ச்சி உள்ளீடுகளை வழங்கினார். மேலும், அவர் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தை நவீனமயப்படுத்துவதன் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விதப்புரை செய்வதற்கான ஆலோசனைக் குழுவிலும் தேசிய அறிவியல் மன்றத்தின் இலங்கை சமூகவியல் ஆராய்ச்சியினை வலுவூட்டுவதற்கான குழுவிலும் பங்கேற்றார். மேலும், டயலொக் கல்வி மன்றத்தின் பொறுப்பாளராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

சமர்ப்பணங்கள் மற்றும் கலந்துரையாடல் மன்றங்கள்.

கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சியாளர்கள் திறன் மற்றும் கல்வி தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை விளித்துரைப்பதற்காக பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றார்.

- "தெற்காசியாவின் பொருளாதார விருத்தி" எனும் மாநாட்டில் திருமதி பிலேக்ஷா வீரரத்ன "பாத் எக்கடமி இலத்திரனியல் கற்றல் வீடியோ பாடங்களுக்கு இலங்கையின் கணித பாடத்தின் செயலாற்றுகையை விருத்தி செய்ய முடியுமா? எனும் தலைப்பின் கீழ் சமர்ப்பணமொன்றை முன்வைத்தார். கொள்கை கற்கைகள் நிறுவகம் மற்றும் மொனாக்ஷ் பல்கலைக்கழகம் களுத்துறையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்பாடு செய்தது. (சனவரி)
- திருமதி. அக்ஷானி அபயசேகர கொள்கை கற்கைகள் நிறுவகம் மற்றும் மொனாக்ஷ் பல்கலைக்கழகத்தினால் களுத்துறையில் ஒழுங்கு செய்த "தெற்காசியாவின் பொருளாதார அபிவிருத்தி" எனும் மாநாட்டில் (சனவரி) மற்றும் தெற்காசிய பல்கலைக்கழகத்தின் அனுரசனையில் இந்தியாவில் புதுடில்லி நகரில் நடாத்தப்பட்ட "தெற்காசியாவின் பொருளாதார அபிவிருத்தி" பற்றி 5 ஆம் சர்வதேச மாநாட்டில் (பெப்ரவரி) "இலங்கையில் கல்வியில், தொழிலில் அல்லது பயிற்சியில் ஈடுபடாத இளைஞர்கள்: கல்வியில், தொழிலில் அல்லது பயிற்சியில் ஈடுபடாத இளைஞர் யுவதிகள் பற்றி பகுப்பாய்வு" பற்றிய சமர்ப்பணமொன்றை முன்வைத்தனர்.
- திருமதி அக்ஷானி அபயசேகர பொருளாதார முன்மாதிரிகளை உருவாக்குவதற்கான தெற்காசிய வலையமைப்பினால் (ளுயுநேஆ)ஏற்பாடு செய்யப்பட்டு டாக்கா நகரத்தின் டீயுசுஊ ஊநவெசந ஐலெ ஹோட்டலில் நடாத்தப்பட்ட "தெற்காசியாவின் துணை தேசிய மட்டத்தில் நிதிவசதியினை வழங்குதல் மற்றும் பிரதேச மட்டத்தில் சேவைகளை வழங்குதல்" பற்றிய நான்காம் தெற்காசிய பொருளாதார வலையமைப்பு மாநாட்டில் "இலங்கை பாடசாலைகளுக்கு நிதிவசதியளிப்பதற்குள்ள சூத்திரம்" பற்றிய சமர்ப்பணமொன்றை முன்வைத்தார் (செப்டெம்பர்)
- சர்வதேச உயர் கல்வி மாநாட்டில் திருமதி நிக்ஷா அருணதிலக "உயர்கல்விக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதில் காணப்படும் இடைவெளிகளை பூர்த்திசெய்வதற்கான மூலோபாயங்கள் – தென் மற்றும் கிழக்காசிய அனுபவங்கள்" எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற கலந்துரையாடல் மன்றத்தில பங்கேற்றனர். கொழும்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு இலங்கை சான்றிதழ் பெற்ற முகாமைத்துவ கணக்காய்வாளர் நிறுவகத்தினால் அனுசரணை வழங்கப்பட்டது. (அக்டோபர்)

ஊழியச் சந்தை தொடர்பான பிரச்சினைகளை வலியுறுத்தும் ஆராய்ச்சிகளை பற்றி பிரச்சாரம் செய்தல் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டன.

- திருமதி நிக்ஷா அருணதிலக " ஏற்றுமதிகளின் மூலம் தொழில்வாய்ப்புகள்:



தெற்காசியாவில் வணிகம் மூலம் கிடைக்கும் நன்மைகளை மேம்படுத்துதல்" பற்றிய ஆய்வு அறிக்கையினை வெளியிடும் நிகழ்ச்சித்திட்டத்தில் வளப்பகிர்வு குழாத்தில் உறுப்பினராக பணியாற்றினார். கொழும்பில் அமைந்துள்ள கொள்கை கற்கைகள் நிறுவகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு உலக வங்கி மற்றும் உலக தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றினால் அனுசரணை வழங்கப்பட்டது. (பெப்ரவரி)

- திருமதி. நிக்ஷா அருணதிலக பெண்கள் மற்றும் ஊழியப் படை தொடர்பான பல்வேறு பிர்ச்சினைகளை எழுப்பிய "தொழில் நிலை தொடர்பான சட்டமூலத்தில் காணப்படும் பால்நிலை சார்ந்த தாக்கங்கள" பற்றிய கலந்துரையாடலில் வளப்பகிர்வு குழுவின் உறுப்பினராக பங்கேற்றார். கொழும்பில் நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு தொழில் மற்றும் தொழில் உறவு அமைச்சினால் அனுசரணை வழங்கப்பட்டது. (யூலை)
- "மிகச்சிறந்த தொழில் வாய்ப்புகளுக்காக பொருளாதாரத்தை மாற்றியமைத்தல்" எனும் தொனிப்பொருளின் கீழ் றுஜனுநுசு அபிவிருத்தி மாநாட்டில் திருமதி நிக்ஷா அருணதிலக "குறைந்த பயிற்சியுடன் கூடிய பெண்கள் ஊழியப் படையில் பங்கேற்பதை உயர்த்துதல்" பற்றிய ஆராய்ச்சி பத்திரத்தை சமர்ப்பித்தார். தாய்லாந்தில் பாங்கொக் நகரத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஐக்கிய நாடுகளின் பல்கலைக்கழக அபிவிருத்தி பொருளியல் ஆராய்ச்சிக்கான உலக நிறுவகத்தினால் (ருரே-றுஜனுநுசு) அனுசரணை வழங்கப்பட்டது.
- இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "முகாமைத்துவ ஆராய்ச்சியாளர்களின் நான்காம் துறைகளுக்கிடையிலான மாநாடு" எனும் நிகழ்வின் போது திரு.ருவன் சமரவீர "ஊழியர் அகத்துாண்டலை தீர்மானிக்கும் காரணிகள்: இலங்கையில் பிரசித்தமான நிறுவனமொன்றின் நிறைவேற்று நிலை பணியாட்டொகுதி தொடர்பாக சம்பவக் கற்கைகள்" பற்றிய இணையவழி மாநாடொன்றில் சமர்ப்பணமொன்றை முன்வைத்தார். (அக்டோபர்)

கொழும்பில் நடைபெற்ற போசணைநுசு செயற்குழுவின் ஆலோசனை செயலமர்வில் திருமதி பிரியங்கா ஜயவர்தன "இலங்கையின் போசணைத் துறைக்கு அரச நிதி வழங்கப்படுவதை மதிப்பீடு செய்தல்" பற்றிய கற்கையின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களை முன்வைத்தார் (யூலை)

முஜஏரு இன்டர்நெக்ஷனல் அமைப்பினதும் ஐக்கிய இராச்சியத்தின் கென்சர் ரிசர்ச் நிறுவகத்தினதும் நிதி வசதியின் கீழ் கொள்கை கற்கைகள் நிறுவகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட புகையிலை பாவணையை கட்டுப்படுத்துதல் பற்றிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருமதி சுனிமாலி மதுராவல "புகையிலை பாவணையை கட்டுப்படுத்துவதற்கான தேவை, கிரயம் மற்றும் புகைத்தல் பரவியிருத்தல்" பற்றிய சமர்ப்பணமொன்றை முன்வைத்ததுடன் கொள்கை கற்கைகள் நிறுவகத்தில் நடைபெற்ற ஆதரித்துவாதாடும் குழுக்களின் செயலமர்வின்போது திருமதி சதுர்கா கருணாநாயக்க "புகையிலை பாவணையை நிறுத்துதல்: கைவிடுவதற்கு உதவுதல்" பற்றிய சமர்ப்பணமொன்றை முன்வைத்தார். (நவம்பர்)

வலைப்பதிவு கட்டுரைகள்

திறன் மற்றும் கல்வி தொடர்பாக கவனம் செலுத்தி திருமதி அக்ஷானி அபயசேகர டோக்கிங் இகோனமிக்ஸ் சஞ்சிகைக்கு பின்வரும் தலைப்பின் கீழ் வலைப்பதிவு கட்டுரையொன்றை எழுதினார். "இலங்கையில் கல்வியில், தொழிலில் அல்லது பயிற்சிகளில் ஈடுபடாத ஆட்களின் எண்ணிக்கையை குறைத்தல்: பாடசாலைக் கல்விக்கு பின்னர் தொழிலுக்கு இலகுவாக செல்லக்கூடியதன் தேவை" (சனவரி)."நான்காம் கைத்தொழில் புரட்சி யுகத்தில் கூட்டிகை வகுப்பறைகள் இலங்கையில் கல்வியின் எதிர்காலமா? (செப்டெம்பர்) மற்றும் "நான்காம் கைத்தொழில் புரட்சியில் இலங்கையில் கல்வியின் எதிர்காலம்" (நவம்பர்). திருமதி. பிரியங்கா ஜயவர்தன உலகளாவிய அபிவிருத்தி வலையமைப்பின் (புனுடீ வலைப்பதிவுக்கு "இலங்கையில் கல்வி: பிரவேசிப்பதற்கான வசதிகளை விரிவாக்குதல் மற்றும் திறன்களை விருத்தி செய்தல்" எனும் தலைப்பின் கீழ் ஆக்கமொன்றை எழுதினார். திருமதி சுனிமாலி ஜயவர்தன இலங்கை எக்ஸ்போர்டர் சஞ்சிகைக்கு (103 ஆம் இதழ் - 2019 சனவரி - மார்ச்) "நிதிசார் அறிவு: தற்காலத்தின் மிகவும் முக்கியமான தேவை" எனும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதினார்.

ஊழியச் சந்தை பற்றி கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்ட விடயங்களை பிரச்சாரம் செய்து சமன் கெலேகம முதலாவது ஞாபகார்த்த ஆராய்ச்சி விருதைப் பெற்றுக்கொண்ட திருமதி திசலி த சில்வா திருமதி நிக்ஷஷா அருணதிலகவுடன் இணைந்து இணைப் பதிப்பாசிரியர் எனும் பொறுப்பின் கீழ் "இளைஞர்களுக்கு முச்சக்கர வண்டி தொழிலில் ஈடுபடுவதற்கு வாய்ப்புகளை வழங்குவதா இல்லையா - இலங்கையில் முச்சக்கர வண்டி சந்தையில் நுழைவதற்கு காணப்படும் வாய்ப்பு ஒழுங்குறுத்தப்பட வேண்டுமா" எனும் வலைப்பதிவு கட்டுரையை எழுதினார். (சனவரி). திருமதி நிக்ஷா அருணதிலக "இலங்கையில் தொழில்வாய்ப்புகளின் தரத்தை உயர்த்துதல்: ஏற்றுமதியை மேம்படுத்துதல் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையுமா?" எனும் தலைப்பின் கீழ் டோக்கிங் இகோனமிக்ஸ் சஞ்சிகைக்கு ஆக்கமொன்றின் வாயிலாக பங்களிப்பு வழங்கினார். (ஏப்பிறல்). திருமதி சதுர்கா

கருணாநாயக்கவுடன் இணை பதிப்பாசிரியர் பொறுப்பினை வகித்து திருமதி நிக்ஷா அருணதிலக "அனைத்து தட்டெழுத்தாளர்களும் எங்கு சென்றுள்ளார்கள்"? தொழில்நுட்பம் மற்றும் இலங்கையில் மாற்றம் அடைந்துவரும் தொழில்வாய்ப்புகளின் தோற்றப்பாடு" எனும் தலைப்பின் கீழ் கட்டுரையொன்றை எழுதினார் (யூன்). திருமதி அக்ஷானி அபயசேகர "புதிய வேலை உலகத்தில் சவால்களை வெற்றிகொள்ளுதல்: நான்காம் கைத்தொழில் புரட்சிக்கு தெற்காசியா எந்தளவிற்கு தயார் நிலையில் இருக்கின்றது" எனும் தலைப்பில் ஆக்கமொன்றை வரைந்தார் (அக்டோபர்). திருமதி நிக்ஷா அருணதிலக, திரு. மனோஜ் திப்பொட்டுவாவ மற்றும் திருமதி பிரியங்கா ஜயவர்தன ஆகியோரின் இணை பதிப்பாளர்களாக பணியாற்றும் "தேயிலை மற்றும் அனுதாபம் போதுமானதாக அமையாத போது. இலங்கையின் பெருந்தோட்டத் துறையின் தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கு போதுமான சம்பளம்" என்பதைப் பற்றிய கட்டுரையொன்றை எழுதினார் (டிசெம்பர்)

பால்நிலையுடன் தொடர்புடைய பிரச்சினைகளை கலந்துரையாடும் வகையில் திருமதி சுனிமலீ மதுராவல டோகிங் இகோனமிக்ஸ் சஞ்சிகைக்கு "பேரழிவுகளின்போது பெண்கள்: இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்தில் பாலநிலை பரிமாணங்கள்" (சனவரி) மற்றும் "இலங்கை பெண்களுக்கு மிகவும் சிறந்த தொழில்வாய்ப்புள் ஊடாக மிகவும் உயர்ந்த சமூக பாதுகாப்பு: தொழில்நுட்பத்தினதும் புத்தாக்கத்தினதும் வகிபாகம்" (மார்ச்சு) எனும் ஆக்கத்தை எழுதினார்.

டோக்கிங் இகோனமிக்ஸ் வலைப்பதிவுக்கு எழுதப்பட்ட அனைத்து கட்டுரைகளும் முதல் தர பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் பிரசுரிக்கப்பட்டன.

ஊடகம்


"இலங்கையில் ளுவுநுஆ கல்வியின் முக்கியத்துவத்தை" கலந்துரையாடும் பொருட்டு திருமதி நிக்ஷா அருணதிலக வுஏ 1 தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிப்பரப்பாகிய டீணை லை குழஉரள நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். (செப்டெம்பர்)

வறுமை மற்றும் சமூக நலனோம்புகை



கடந்த தசாப்தம் முழுவதும் வறுமையை குறைக்கும் விடயத்தில் இலங்கை அடைந்து கொண்டுள்ள முன்னேற்றத்தின் மத்தியிலும் கூட சமத்துவமின்மை மற்றும் எளிதில் பாதிப்படையும் தன்மை ஆகியவை பாரிய அளவு கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சினைகளாக உள்ளன. உயர்ந்த மட்டத்தில் காணப்படும் வருமான ஏற்றத்தாழ்வுகளுக்கு மேலதிகமாக கல்வி, சுகாதாரம், நீர், மற்றும் துப்புரவேற்பாடு மற்றும் நிதி சேவைகள் போன்ற அடிப்படை சேவைகளை அடைந்து கொள்ளும் விடயத்திற்கு ஏதுவாக சமத்துவமின்மை காணக்கூடியதாக உள்ளது. வறுமை, சமத்துவமின்மை மற்றும் எளிதில் பாதிப்படையக் கூடிய தன்மை போன்றவற்றை விளித்துரைத்தல் முக்கியமான கொள்கை முன்னுரிமைகளாக காணப்படுகின்ற அதேவேளை அரசாங்கம் 2030 ஆம் ஆண்டாகும் போது 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளது. இந்த சூழமைவின் கீழ் வறுமை மற்றும் சமூக நலனோம்புகை பற்றி கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் ஆராய்ச்சிகளின் மூலம் வறுமை, சமத்துவமின்மை, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள், சமூகப்பாதுகாப்பு மற்றும் நிதிசார் ரீதியில் அனைவரையும் உள்வாங்குதல் உள்ளிட்ட பல துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்



கொள்கை கற்கைகள் நிறுவகத்தின் வறுமை மற்றும் சமூக நலனோம்புகை தொடர்பான ஆராய்ச்சிக் குழு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்புடைய பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. திருமதி. கங்கா திலகரத்ன மற்றும் திருமதி சிந்தனி சூரியமுதலி ஆகியோர் இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேலதிகமாக தெற்காசிய பிராந்தியத்தின் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்ந்தறியும் "தெற்காசியாவுக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை பொருள்கோடல் செய்தல்: பிராந்திய சட்டகமொன்றை தேடுதல்" எனும் ஆய்வினை மேற்கொண்டனர். இந்த ஆய்வின் மூலம் காலநிலையை பாதுகாத்துக்கொள்ளும் நடவடிக்கைகள், வலு, உணவுப் பாதுகாப்பு, பொருத்தமான தொழில் வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பிராந்திய ஒத்துழைப்புக்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் முன்னுரிமை இனங்காணப்பட்டதுடன் இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நடைமுறைப்படுத்துவதை ஊக்கப்படுத்துவதற்கான பிராந்திய முறைமைகள் மற்றும் சாதனங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. மேற்படி ஆய்வின் ஊடாக இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் நிலைமை ஆராயப்பட்டதுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் நடைமுறைப்படுத்துவதற்கு காணப்படும் சவால்கள் கலந்துரையாடப்பட்டன. ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவினால் (ருநேளுஊயீ) மேற்படி கற்கைக்கான நிதி வசதி வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, கங்கா திலகரத்ன, நிபுனி பெரேரா மற்றும் ஜனனி பெரேரா ஆகியோரினால் "நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் பொருட்டு ஒன்றிணைந்து பட்டுப்பாதையினை கட்டியெழுப்புவதற்கான தேசிய கொள்கைகளின் ஆற்றலை வலுவூட்டுதல்" எனும் விடயம் தொடர்பாக கற்கையொன்றை மேற்கொண்டனர். பட்டுப் பாதை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஆகியவற்றுக்கிடையில் சாத்தியமான தொடர்புகளை புரிந்துகொள்ளுதல் இந்த கற்கையின் நோக்கமாகும். பட்டுப்பாதை நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக பங்குதார நாடுகளின் முக்கியமான சமூகப் பொருளாதார தாக்கங்களுக்கு காரணமாக அமையக்கூடிய கொள்கை ஒருங்கிணைப்பு, வசதிகளின் தொடர்புகள், வாணிபம், நிதி ஒருங்கிணைப்பு மற்றும் மக்கள் – மக்கள் இடையிலான தொடர்புகள் ஆகிய ஐந்து பிரதான ஒத்துழைப்பு முன்னுரிமைகள் வாயிலாக பிராந்தியஃநாடுகளுக்கிடையில் இணைத் தொடர்புகளை முன்னேற்றுதல் நோக்கமாக கருதப்படுகின்றது. எவ்வாறாயினும் இதன் மூலம் பல்வேறு பாதகமான தாக்கங்கள் ஏற்படுத்தப்படலாம். இவ்வாறானதொரு சூழமைவில் இந்த ஆராய்ச்சியின் ஊடாக இலங்கையில் காணப்படும் பட்டுப்பாதை நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடையதாக அமையக்கூடிய கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை இனங்கண்டு கொள்வதற்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் அவ் விடயத்தில் காணப்படும் சாதகமான தொடர்புகள்ஃதாக்கங்களை ஆராய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக அலுவல்களுக்கான திணைக்களத்தினால் (ருனேஞுளுயு) இந்தக் கற்கைக்கு நிதி வசதி வழங்கப்பட்டது.

வெளியீடுகள்

வறுமை மற்றும் சமத்துவமின்மை தொடர்பான பிரச்சினைகளை வலியுறுத்தும் திருமதி கங்கா திலகரத்ன, மோதலுக்கு பின்னரான சூழமைவில் அபிவிருத்தியின் போது உள்நாட்டு மற்றும் சர்வதேச சவால்களை மற்றும் சந்தர்ப்பங்களை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக திருமதி துஷ்னி வீரகோன் மற்றும் திரு சிசிர ஜயசூரிய ஆகியோரினால் தொகுக்கப்பட்ட சிங்கப்பூரின் ஸ்பிரின்ஜர் வெளியீட்டினால் வெளியிடப்பட்ட நூலில் "மோதலுக்கு பின்னரான சூழமைவில் இலங்கையில் சமத்துவத்தை அடைந்து கொள்ளுதல்" தொடர்பான அத்தியாயம் ஒன்றை எழுதினார். மேலும், திரு. ருவன் சமரவீர, பீ.எம்.எம். பர்னாந்து, பீ.எச்.டி குமார மற்றும் தர்மதாச ஆகியோருடன் இணைந்து இலங்கையின் குடித்தொகைக் கற்கை சஞ்சிகை, 20(2) இற்கு "இலங்கையில் பதுளை மாவட்டத்தில் பெருந்தோட்டம் சார்ந்த மக்கள் மத்தியில் காணப்படும் பல்பரிமாண வறுமை" பற்றிய கட்டுரையொன்றை எழுதினார்.

